என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

நல்லசோறு
சாப்பிட
AMIRTAA
அரிசி
வாங்குங்கள்

September 2015
FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திரு. நவரத்தினம் விக்னேஸ்வரலிங்கம்

(லிங்கம் - Lingam)

பிறப்பு : 31 ஜனவரி 1939 — இறப்பு : 8 செப்டம்பர் 2015


யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், லண்டன் Beckenham-ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் விக்னேஸ்வரலிங்கம் அவர்கள் 08-09-2015 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

இவர் பழகுவதற்கு இனியவர். உற்றார் உறவினருக்கு உதவி செய்வதில் சிறந்த பண்பாளர். கரம்பன் (ஊர்காவற்றுறை) புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், நிரு நிறுவனம் சாந்தகுமார், பிருந்தா, அஜந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழர் தகவல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2046
புரட்டாசி
மலர் : 13
இதழ் : 148
செப்டம்பர் - 2015

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல சோறு
சாப்பிடவேண்டுமா
AMIRTAA
அரிசி வாங்குங்கள்



தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்
Tharani Jewellery
54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி. கிருஷ்ணவேணி மகேஸ்வரன்

திருமதி. கிருஷ்ணவேணி மகேஸ்வரன் அவர்கள் இங்கிலாந்து வாழ் தமிழர்ளுடைய வாழ்வுக்கும் வரலாற்றுக்கும் தன்னால் இயன்ற பங்களிப்பை நல்கிய ஒருவர். அவர் 59 வயதில் 13.09.2015 அன்று காலமானார் என்ற செய்தி புலம்பெயர் தமிழருக்குச் சோகமளிக்கும் ஒன்றாக அமைந்தது. அமைதியான சாந்தமான குணம். அன்பாகப் பண்பாகப் பழகுதல். தான் செய்வதை வெளியே சொல்லாது புலம்பெயர் தமிழ்ச் சமுகத்தின் நல்வாழ்வுக்காகவும், தாயக மக்களின் விடுதலை வாழ்வுக்காகவும் தன்னால் இயன்றதெல்லாம் செய்யும் உயர் தன்மை. இவற்றின் மொத்த வடிவம்தான் கிருஷ்ணவேணி மகேஸ்வரன்.

இவரின் கணவர் வோல்தம்ஸ்டோ குமரன் வர்த்தக நிறுவன உரிமையாளர் குமாரசுவாமி மகேஸ்வரன் அவர்களுக்கும், மகள் கிரிஷாந்திக்கும், *''தன்னுயிர் பிரிந்ததைப் பார்த்தவர் இல்லை - என்னுயிர் பிரிந்ததைப் பார்த்திருந்தேன்''* என்ற கவிதை வரிகள் கூறும் அந்த உயிர்த்துன்பம் ஏற்பட்டுள்ள இந்நேரத்தில், எல்லாம் வல்ல இறைவனே இவர்கள் இந்தத் துன்பத்தைப் பிரிவைக் கடந்து, கிருஷ்ணவேணி அவர்களின் நினைவை, அவர்விட்டுச் சென்ற அவரின் கனவுகளை நிறைவேற்றுவதின் வழி நனவாக்கி, அவர் என்றும் இவர்களுடனும் எங்களுடனும் காலத்தை வென்ற மரணத்தை வென்ற நிலையில் புகழுடம்புடன் வாழவைப்பதற்கு உதவ வேண்டும் என்று அவனருளாலே அவன் தாள் பணிகின்றேன்.

**சூ.யோ பற்றிமாகரன்**

(ஆசிரியர், ஊடகவியலாளர், ஆய்வாளர்), ஒக்ஸ்வேர்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMIRTAA

AMIRTAA

## 'நல்ல சோறு'




லண்டனில்

**AMIRTAA**

பொன்னி புழுங்கல் அரிசி
விற்பனை ஆகும் இடங்கள்

**Harin Supermarket**
Eastham

**Katpakam**
Lewisham

**Eelam Shop**
Catford

**Krishna Stores**
Hayes

**Prime Food & Wine**
Tooting

**Best Food**
Wembley

**Best Food**
Hounslow

**Best Food**
West Croydon

**Harrow Food & Wine**
Harrow

**இப்பொழுது விற்பனையில்...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த மற்றும் விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை.**

**விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு**




# www.orderfood.lk

**Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka**

**Order online at www.orderfood.lk**

**Order from as little as £10**

**Get 10 % discount on your order.**




Promotion code:UK150630 Offer valid until:30/06/2015

- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

மேலும் விரைவில் பல இடங்கள்.

உங்கள் தேவை எங்கள் சேவை

UK +44 (0)207 118 0550

SL +94 114 444 111

Available on the App Store

ANDROID APP ON Google play

info@orderfood.lk | /orderfood | /orderfoodlk

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aarti tv

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!



OVER 500 Tamil Movies Available Instanly

FREE CRICKET CHANNELS

30ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்

Local Time Broadcast: Indian Time / UK Time / European Time

பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.

சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.

Roku | Windows | App Store | Google play

FREE CHANNELS

MultiRoom Viewing

எமது வாடிக்கையாளர்கள் தங்களது வீடுகளில் இருக்கும் அறைகளில் ஒரே நேரத்தில் பல அலைவரிசைகளை பார்வையிடுவதற்கான வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.

SPECIAL OFFER 12 Months Subscription + Set Top Box £99

24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% LEGAL

United Kingdom
0203 318 2004 / 0783 276 9522

Web
WWW.AARTITV.TV

15 Days Money Back GUARANTEE

WWW.ATHAVAN.TV

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தாளிப் பிள்ளைகளை விரும்பமாட்டான் நல்லூரான்....!

நல்லூர் முருகன் எங்களின் குலத்தின், இனத்தின் காவல்தெய்வம்... எங்கள் தமிழீழ தேசியத் தலைவர் வணங்கிய வடிவேலன். ஆனால், இன்று, புலம்பெயர்ந்த எம் தமிழர்களின் செயலை, அந்த நல்லூர் முருகனே...ஒரு நாளும் விரும்பமாட்டான் என்பது திண்ணம்.

சுதந்திரமாக, தன் மக்கள் எடுத்த திருவிழாக்களை மனமகிழ்ச்சியோடு ஏற்று மகிழ்ந்த நல்லூர் முருகனுக்கு, இன்று சிங்கள இனவெறியர்களின் துப்பாக்கிகளுக்கு நடுவே, அந்நிய மக்களைப் போல் வந்து, தன்னை வணங்குவது எப்படி உகந்ததாக இருக்கும்? இதை இந்த தமிழர்கள் சிறிதும் உணர்ந்ததாகத் தெரியவில்லையே?

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்

வாடி இருக்குமாம் கொக்கு" என்றாரே தமிழ்மூதாட்டி அவ்வை. அப்படித்தானே இருந்தது எங்கள் இனம். தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் இல்லையா? தனி ஈழத்துக்கு இணையாக எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று, அந்த வேள்விக்குத் தன் குடும்பத்தையே ஈடாகக் கொடுத்தாரே தலைவர் பிரபாகரன். அந்த தன்னலமற்ற தலைவனின் வழியில், எத்தனை எத்தனை மாவீரர்கள் மண்ணில் விதையாய் வீழ்ந்தனர்.

ஆனால் இன்றைக்குப் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுவோர், தங்கள் வரலாற்றை மறந்து, தலைவனின் கட்டளையை மறந்து, சுயமரியாதையை இழந்து, சிங்களவனின் வாசலில் சென்று நிற்கின்றனர். இலங்கைக்கு விருந்தாளிகளாகப் போய்வந்தால் போதும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள் போல் தெரிகிறது.

இன்று ஜெனீவாவின் மனித உரிமைகள் ஆணையம், ஈழத்தமிழர்களுக்கு, சிங்கள வெறியர்கள் இழைத்த அநீதியைப் புரிந்து கொண்டுள்ளது. இந்த நிலையில், இலங்கையின் உச்சி மயிரைப் பிடித்து ஆட்ட வேண்டிய புலம்பெயர்ந்த தமிழர்கள், கடவுச்சீட்டுக்கும், அனுமதிச் சீட்டுக்கும் அந்த நாட்டின் வாசலில் காத்துக்கிடக்கலாமா? இறுதிப் போர் முடிந்த, 2009இல் இருந்தே, இலங்கைப் பொருள்களைப் புறக்கணியுங்கள், இலங்கைக்குப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துங்கள் என்று சொல்லி வருகிறோம். அதை யாரும் சிந்தித்ததாகக் கூட தெரியவில்லை. அப்படியென்றால், போராட்ட குணம் மழுங்கிப் போய்விட்டதா?

ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். எந்த தகப்பனும், தன் சொந்தப் பிள்ளைகள் விருந்தாளிகளாக வந்து போவதை விரும்பமாட்டான். நல்லூர் முருகனும் அப்படித்தான்... நன்றி மறந்தவர்களை ஒருநாளும் மன்னிக்க மாட்டான்.

கா. விஜயேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. துரைசாமி,
தமிழ்க்கல்லூரி முன்னாள் முதல்வர்

# தமிழின் பெருமையும் தற்கால நிலையும்



"என்றும் உளதென் தமிழ்" என்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர், எல்லையறு பரம்பொருள் முன் இருந்த படி இருப்பது போல்," என்னும் உவமையால், பல மொழிகள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பினும் இளமை மாறாச் செவ்வியுடன் விளங்குகிற தன்மை உடையது தமிழ்மொழி என்று கூறினார் திரு. சுந்தரம்பிள்ளையவர்கள். தமிழ்மொழிக்கு இணையாக வைத்துப் பேசப் பெறுகின்ற வடமொழி சிறந்ததாயினும் உலக வழக்கு அழிந்தது என்ற உண்மையையும் பெற வைக்கின்றார் அத்தமிழ்வாணர்.

வடநாட்டினின்றும் நம் நாட்டிற்கு குடிபுகுந்த வடவர், தமிழ் மொழியை, தேன் தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ், தென்தமிழ், அருந்தமிழ் என்றெல்லாம் இனிமைப் பண்புணர்ந்தும் அடைமொழி பெற்று வழங்குவதையும் தனித்தியங்கும் ஆற்றலோடு விளங்குவதையும், மந்திரம் முதலிய நுட்பங்கள் பொருந்தியுள்ளதையும் கண்டனர். கண்ட அவர்கள் தம்முடைய ஆரிய மொழிக்கு மாறான மொழியாகக் கொண்டனர். தமிழ்நாட்டில் குடி புகுந்து தமிழ் மொழியைப் பேச ஆரம்பித்த அவர்கள் வட சொற்கள் பலவற்றைக் கலந்து பேசுவாராயினர்.

எனவே, மிகவும் தொன்று தொட்ட காலத்தே தமிழ் மொழியில் வட சொற்கள் கலக்கலாயின. அதனால் தொல்காப்பியர் பல இலக்கியங்களைக் கண்ட பின் இலக்கணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்புகுந்த நூலாகிய தொல்காப்பியத்தில் செய்யுளுக்குரிய சொற்களில் செந்தமிழ்ச் சொல்லோடு வடசொல், திசைச் சொற்களும் வேண்டுமானால் இடம்பெற அமையும் என்று கூறிப் போந்தனர்.


சிவஞான முனிவர், வடக்கும் ஒரு திசைதானே, திசைச் சொல்லெனக் கூறியவர் வட சொல்லென வேறு கூறுவானேன்? என்ற வினாவை எழுப்பி, அதற்கு விடையாக, வடசொல் திசைச் சொல்லாயினும், மற்ற திசைச் சொற்கள் போலாது தேவர்களுக்கு உரித்தாகலானும் தமிழ் மொழியோடு மாறுபட்டதாதலினாலும் வேறு கூறினார் என்று விளக்கம் கூறி ஆரிய மொழியைத் தெய்வ மொழியென்றும் பாராட்டி விட்டுச் சென்றார். அதனால் பண்டைக் காலம் தொட்டே தமிழ் மொழி வளர்ச்சியைத் தடுத்து வருவதற்குரிய வழிகளைக் கையாண்டு வரலாயினார் வடவர்கள். எனவே செந்தமிழ் மொழி ஆரியக் கலப்பின்றி நடைபெறாது என்பதை உலக மக்கள் உணர்வான் வேண்டி அவர்கள் மேற்கொண்ட சூழ்ச்சிகள் பல, அவைகளில் சில கூறுதும்.

*1.* ஆரியம் தேவ மொழி என்று காரணம் சொல்லித் தேவாலயங்களில் ஆரிய மொழியாலேயே பூசனை செய்ய வேண்டும் என்றனர். அம்மட்டோ? ஆலயங்கள் இருக்கும் சிறந்த ஊர்களின் பெயர்களாகிய திருமுதுகுன்றம், திருமறைக்காடு முதலியன விருத்தாசலம் வேதாரண்யம் ஆயின. மேலும் இறைவன் திருப்பெயர்களாகிய பழமலை நாதர், தாயுமானர் முதலியன விருத்தாச்சலேஸ்வரர், மாத்ருபூதேஸ்வரர் என்றும் வழங்கலாயின.

2. மேலும் அவர்கள் நீர், முத்து என்பன போன்ற செந்தமிழ்ச் சொற்களை நீரம், முக்தா என்ற ஆரியச் சொற்களின் சிதை வென்றும், செந்தமிழ் மொழிக்கே சிறந்த ஒப்புயர்வு அற்ற தெய்வத்தன்மையுடைய திருக்குறளையும் வேறு சில நூல்களையும் ஆரியத்தின் மொழி பெயர்ப்பு என்றும் கூறுவாராயினர்.

*3.* அல்லாமலும், செந்தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதப் புகுந்த பல தமிழ்ப் புலவர்களும் கூட, வட நூலை மேற்கோளாகக் கொண்டு உரை எழுதலாயினர்.

*4.* பவணந்தி முனிவர் தமிழ் - ஆரியம் இவை இரண்டிற்கும் உள்ள பொது வெழுத்துக்களையும் தனித்தனியே சிறப்பெழுத்துக்களையும் நன்னூலில் கூறினர். அவற்றுள் தமிழ் மொழியில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பெழுத்துக்கள் ற,ன,ழ,எ,ஒ என்ற ஐந்தென்றும் கூறினார். இதனைக் கண்ட ஆரிய மொழியின் பற்றுடையவராக ஒரு செந்தமிழ்ப்புலவர் "ஐந்தெழுத்தாலொரு பாடையும் உண்டென்று அறையவும் நாணுவர் அறிவுடையோர்" என்று கூறிச் சென்றார். எனவே இவ்வாறு சில காரணங்களைக் கூறி ஆரியப்பற்றுக் கொண்ட தமிழ்ப் புலவர்களின் சிலர், அறிந்தும் அறியாமலும் தனித்தினயங்கும் ஆற்றலுடைய செந்தமிழ் மொழியை, அவ்வாற்றல் இல்லாத மொழியாகச் செய்துவரப் பாடுபட்டனர். இதனைக் கண்ட, மறைமலை அடிகள் போன்ற பல செந்தமிழ்ப் புலவர்கள் ஆலயங்களில் வழங்க வேண்டிய மந்திரங்கள் எல்லாம் தமிழ் மொழியிலேயே வழங்க வேண்டும் என்றும் வடசொல் கலந்து பேசுதல், எழுதுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்துவராயினர்.

இதனைக் கண்ட வடமொழிவாணர் சிறிதும் சளைக்காமல் தாங்கள் பேசும் நூல்களிலும், செய்தித் தாள்களிலும் ஆரியக்கலப்போடு செந்தமிழ் மொழியை எழுதி வரலாயினார். அம்மட்டோ? காலம் வருமானால் அச்சமயம் நுழைந்து தங்கள் நினைவைச் செயலாற்றவும் எண்ணி எதிர்பார்த்து இருந்தனர்.

நாட்டில் அன்னிய ஆட்சியை ஒழித்து சுயமாக மக்கள் ஆள வேண்டும் என்ற எண்ணத்தால் புரட்சி நடந்தது. அதன் பயனாக நம் இந்தியா விடுதலை அடைந்தது. நம் நாடு சுய ஆட்சி பெற்ற நிலையில் நாடு முழுவதும் ஒரு மொழிதான் அரசியல் மொழியாக இருக்க வேண்டும் என்றனர் அரசியல் வாதிகள். காலம் பார்த்திருந்த வடமொழிவாணர்கள் நாடு முழுதும் ஒரே மொழி வழங்கப்பட வேண்டுமானால் அதற்கு ஏற்ற மொழி இந்தி ஒன்று தான் என்று கூறி இந்தி மொழியே இந்திய நாட்டின் அரசியல் மொழியாக இருக்க வேண்டும் என்று சட்டத்தில் சேர்த்து விட்டனர். இதனை அறிந்து சில மாநிலத்தார் மறுத்தும், கட்டாயப் படுத்தக்கூடாது என்று சட்டத்தை எதிர்த்தும் சிறை புகுந்தும் சொல்லொணாத்துயருற்றனர்.

சில மாநிலத்தார் மறுப்பதைக் கண்ட வடமொழிவாணர்களாகிய அரசியல் செல்வாக்குடையவர்கள் நம் நாட்டில் கடந்த இருநூறு ஆண்டுகளாக அரசியல் மொழியாக இருந்த ஆங்கிலத்தால் தமிழ் முதலிய மொழிகளின் வளர்ச்சி குறைந்தனவா? இல்லையோ ஆதலின் ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டுப் போன பின் அவர்கள் மொழியையும் அனுப்பி விட்டு ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி இருக்கட்டும். அதனால் தமிழ் முதலிய மொழிகளின் வளர்ச்சி குறையாது, என்று இந்தியைக் கட்டாயமாக்கு வாராயினர். அதனை நம்பிய நம் மாநில சர்க்காரில் பதவி ஆசை கொண்ட சிலர் ஒப்புக் கொண்டு இந்தியைக் கட்டமாயமாக்கினர். ஆனால் மொழிகளின் தன்மையை அவர்கள் உணர்ந்தார்களில்லை. மொழிகள் எல்லாவற்றையும் இருவகையாகப் பிரிக்கலாம். "ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொரு மொழி இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழி" என எழுத்துக்கள் ஒன்றும் பலவும் சேர்ந்தே மொழியாக வழங்கப்பெறுகின்றன. ஆயினும் எழுத்துக்களுக்குள் ஒலியைத் தனியாகக் கூறுமிடத்தும் அல்லது மொழியாக சேர்த்துச் சொல்லுமிடத்தும் எழுத்துக்களின் ஒலியும் தன்மையும் வேறுபடாது. இதனை, "மொழிப்படுத்திசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும் எழுத்தியல் திரியா என்மனார் புலவர்" என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இக்கருத்தை உட்டகொண்ட பவணந்தியார், "மொழியாய்த் தொடரினும் முன்னனைத்தெழுத்தே" என்று கூறினார். இந்நூற்பாவினை விளக்க வந்த சிவஞான முனிவர், எழுத்துக்கள் மொழிகளில் "கண்ணத்தின் கண் அரிசனம் போலாது மாலையின்கண் மலர் போல "நிற்றலின் இவ்வாறு கூறினார் என்று விளக்கம் தந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மாலையின்கண் மலர்போல நிற்றல் தன்மை வாய்ந்தது தமிழ் என்று தெரிகிறது. ஆங்கிமோ கண்ணத்தின் கண் மஞ்சள் கலந்தால் செந்நிறம் தோன்றுவதைப் போல ஆங்கில எழுத்துக்களின் ஒலி வேறு, சேர்த்துக் கூறுமிடத்து உண்டாகிற ஒலி வேறு. ஜி.பி.ணி. எனும் எழுத்துக்களைத் தனித்தனியே கூறும்போது உண்டாகிற ஒலி, சேர்த்துக் கூறுமிடத்துத் தோன்றுவதில்லை. சேர்த்துக் கூறுமிடத்து உண்டாகிய ஒலியில் எழுத்துக்களின் ஒலியைக் காண முடியாது. செந்நிறத்தில் மஞ்சளையும், சுண்ணாம்பையும் தனித்தனியே காண முடியாததைப் போல, எழுத்துக்கள் தெரிந்தவுடன் கூட்டிப் படித்துத் தெரிந்து கொள்ளுகிற தமிழ் போன்ற மொழியை விட எத்தனையோ கடினமானது, ஆங்கிலம் போன்ற மொழிகள். நம் நாட்டில் அரசியல் மொழியாக இருந்தாலும் தமிழ்மொழி வளர்ச்சி குறையாது. ஆனால் இந்தி மொழியோ தமிழ்மொழி இனத்தைச் சேர்ந்தது. எழுத்துக்கள் தெரிந்து கொண்டவுடன் மொழியாகச் சேர்ந்து படிப்பது மிகவும் எளிமை என்பதை நடக்கின்ற தேர்வுகளிலேயே உணரலாகும். மொழிக்குப் பொருள் தெரிந்து கொள்ளுகிற ஒன்று தான். ஆதலின் இந்தி அரசியல் இருக்குமானால் தமிழ் மொழி வளர்ச்சி குறையத்தான் செய்யும்.

ஆதலின் சில பெரியோர்கள் ஆங்கிலம் அரசியல் மொழியாகவே இருக்கட்டும். மாநில மொழிகள் மாநில ஆட்சி மொழியாக இருக்கட்டும். சிறுவர்கள், கற்கவும், எளிமை. ஆதலின் இவ்விரு மொழியே இருக்க வேண்டும் என்றும், ஒரு மொழியே இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் அரசியல் வாதிகளாக உள்ள வடமொழிப் பற்றுக் கொண்டவர்கள் ஆங்கிலேயர் சென்றபின் ஆங்கில மொழி இந்நாட்டில் கூடாது என்கிறார்கள். ஆங்கில ஆட்சியால் ஏற்பட்டுள்ள நிரந்தரமான நன்மைகளை நாம் வேண்டாமென்று ஒதுக்குதல் பொருந்துமா? ஆதலின் ஆங்கிலம் உலகப் பொது மொழியாக இருத்தலானும், ஆங்கிலம் இந்திய அரசியல் மொழியாகவும், மநில ஆட்சி மொழியாகவும் மாநில மொழியாகவும் இருத்தலே நன்றென்று சில ஆன்றோர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதே சாலச் சிறந்ததாகும்.

வடமொழிவாணரோ அதனை விரும்பாது இந்தியை வேண்டாத மக்கள் மீது மெதுவாகத் திணித்து அதன் மூலமாக ஆரிய மொழியை வளர்க்க வேண்டும் என்றும் ஆரியர்கள் சூழ்ச்சிக்கு ஏனையர் அடங்கி ஆரியத்தைத் தேவமொழி என்றும், ஆரியர்களைப் பூதேவர் என்று கொள்ள வேண்டும் என்றும் கருதி அதற்கு ஆவனவற்றையே செய்து வருகின்றனர்.

இந்தியை இந்திய அரசியல் ஆட்சி மொழியாகக் கொள்வதால் மற்றொரு கேடும் தமிழ் தெலுங்கு முதலிய பேசும் மக்களுக்கு உண்டாகிறது. அதாவது இந்திய ஆட்சி மொழி இந்தி. உலகப் பொது மொழி ஆங்கிலம். மாநில மொழி தமிழ் முதலியனவற்றுள் ஒன்று. எனவே தமிழ்நாட்டு மாணவர்கள் மூன்று மொழி பயில வேண்டும். மாநில மொழி இந்தியாக உள்ள மக்கள், இந்தி, ஆங்கிலம் இரண்டே மொழி கற்றல் போதும். அதனால் இந்தி மொழி பேசும் மாநில மொழி மக்கள் இருமொழியை விரைவிலும் எளிமையிலும் கற்று அரசியல் அதிகாரங்கள் அனைத்திலும் பெரும்பாலோர் பங்கெடுத்துக் கொண்டு தங்கள் மொழியிலேயே பற்று உடையவராக ஏனைய மொழியையும் பேசும் மக்களையும் வளரச்சியுறா வண்ணம் தடை செய்வார்கள். ஆதலின் எவ்விதத்திலும் இந்தி அரசியல் மொழியாக வருவது நல்லதல்ல. இந்தியை இந்தியப் பேரரசில் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றவர்களுக்காக இன்னொரு சூழ்ச்சியும் வடமொழிவாணர்கள் செய்ய ஆரம்பித்தனர். அதுதான் இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளையும் பொதுவாக இணைக்ககத் தேவநாகரி எழுத்தால் எழுதப் பெற வேண்டும் என்பது. நீட்டலளவை, நிறுத்தலளவை முகத்தலளவை முதலிய அளவைகள் எல்லாம் இந்திய நாடு முழுவதற்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியதை வரவேற்றுக் கொண்ட மாநிலங்கள் பொது எழுத்தாக்த் தேவ நாகரியையும் ஏற்றுக் கொள்ளும் என்ற நோக்கத்தோடு கொண்டு வந்தனர். இதனை உணர்ந்த அறிஞர்களிற் சிலர் நேசநாகரியால் தமிழ் மொழிக்கு வரும் இன்னல்களை எழுதியும் பேசியும் வந்தனர். ஆனால் தமிழ் பேசி, தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு, தமிழுக்குக் கேடு சூழும் சிலர் அரசியலாரின் தயவைப் பொறுவதற்காக ழ-எ-ழ முதலிய எழுத்தொலிகளுக்குப் பதில் ஏதாவது வகை செய்வார்கள் என்று மழுப்பித் தேவநாகரி லிபியை வரவேற்கின்றனர். தேவநாகரி லிபி வேண்டாம் இந்தி பொது மொழி வேண்டாம் என்று பேசுகின்றவர்களையும் எழுதுகின்றவர்களையும் கண்ணியமற்ற முறையில் பேசி வருகின்றனர்.

தமிழர்கள் பண்பாடு நேரிய முறையில் கருத்தை மறுப்பதும், விளக்குவதுமே சரியான கொள்கை. ஆதலின் சில அறிஞர்கள் சொல்லுவதை ஏற்று இந்தியை இந்திய அரசியல் மொழியாக்குவதையும் எல்லா மொழிக்கும் பொதுவாகத் தேவநாகரி எழுத்தையே பயன்படும் வகை செய்வதும் பொருத்தம் இல்லை.

இது காறும் கூறியவற்றால் அரசியல் செல்வாக்குடையார்கள் வடமொழிவாணர்களின் சூழ்ச்சியில் அகப்படாமல் நமது மாநில மொழியாகிய தமிழ்வாழ ஒல்லும் வகை எல்லாம் வகை காண வேண்டும் என்பது சிலர் எண்ணம் என்பதையும் அறிய வேண்டும். இதே சமயத்தில் மடங்கள் தமிழ்நாட்டில் தமிழும் சமயமும் வளரவே முற்காலத்திலிருந்து பாடுபட்டு வந்தன. இக்காலத்தும் தமிழ் அருச்சனை முதலிய பண்பாடுகள் தமிழ் நாட்டுக் கோயில்களில் முழங்க வேண்டும் என்றும், தமிழ்மொழிக்கு இடையூறு நேரும் வகையில் வேறு எம்மொழியும் வழங்கலாகாது என்றும் அரும்பாடுபட்டு வருகின்றவர்கள் குன்றக்குடி மடத்து மடாதிபதிகளும், ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீடு

வீடென்பது வெறும் சுவரல்ல
குழந்தைகளின் மகிழ்ச்சி பொங்கிப்
பிரவாகமெடுத்து அழகிய வண்ணப் பூச்சாக

விடுமுறைக்கு வந்த நண்பன்
விடைபெறுகையில் தெறித்த கண்ணீர்
மழைநாளின் ஈரமாக
சுவற்று கசியலாய்

பிறந்தநாளை மறந்துவிட்ட அவன் மீதான கோபம்
கோடையின் அனலாய் தகித்திருக்கிறது

ஆத்திரம் தலைக்கேற
கைப்பையை விட்டெறியும்
என் பைத்தியக்காரத்தனம்
வண்ணப்பூச்சிகள் இடையே தெறிப்பாய்
சுவரின் நடுவே

அவனின் மௌனம் தந்த
விரக்தியின் உச்சக்கட்ட எண்ணங்கள்
விட்டம் பூராவும் நிறைந்திருக்கின்றன
என்னுயிரைத் தாங்கிப் பிடித்தவாறு
மனிதர்களை வாசிக்கும் என் மனதின் விசாலம்
வாசலாய்

அவ்வப்போது என்னுள் தோன்றும் வெறுமை
குழாய்களில்
எங்கிருந்தாலும் இவ்வுலகை நோக்கும் என்
கவனம்
சாளரங்களாய்

மன அழுக்குகள் சமையலறையின்
எண்ணை பிசுபிசுப்பாய்
நினைவலைகளோ பரணாக
மன இறுக்கம்
அவ்வப்போது காற்றை மறுத்த புழுக்கமாய்
என் மன அதிர்வுகள் கூட
பூகம்ப நடுக்கமாய்
அதிர்ச்சியில் நொறுங்கும் மனதாய்
ஒரு குண்டுவீச்சில் வீடு தரைமட்டமாய்
இப்போது
எவருமற்ற என் தனிமை
வெற்றிடமாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் நரி

இரவில் ஒரு நாள் நாட்டிற்குள் வந்து உளவு பார்த்துவிட்டுப் போன நரி, காட்டு விலங்குகளை எல்லாம் தன் கர்ணக் குரலால் ஊளையிட்டு அழைத்தது. என்னவோ ஏதோ என்று பதறி ஒன்று சேர்ந்தன விலங்குகள்.

சிங்கமும் தன் குகையை விட்டு வெளியே வந்தது.

புலி, சிங்கம், சிறுத்தை, முயல், குரங்கு, கரடி, யானை.... என எல்லாரையும் ஒரு பார்வை பார்த்த நரி, ஒய்யாரமாய் ஒரு குன்றின் மீது ஏறி நின்றது.

பிறகு குரலை கனைத்துக் கொண்டு,

"தோழர்களே! நான் ஒரு விஷயம் சொல்லத்தான் உங்கள் எல்லோரையும் வரவழைத்தேன்...."

"எங்க வரவழைச்ச.... ஊளையிட்டுல்ல எங்களை ஓடி வரச்செய்தே...."

நையாண்டி செய்தது குரங்கு...

குரங்கை முறைத்துவிட்டு, பேசத் தொடங்கியது நரி.

"நான் நாட்டிற்குள் சென்றிருந்தேன். அங்கே மன்னராட்சி ஒழிந்து அறுபதி ஆண்டுகளுக்கும் மேல் ஆகின்றது. உலகில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா தலைவர்களும், மக்களால் ஓட்டுப் போட்டுத்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி இருக்கும்போது காட்டில் மட்டும் ஏன் வழிவழியாய் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரே ஆட்சி செய்ய வேண்டும்...?"

இதைச் சொல்லும்போது சிங்கத்தின் பக்கம் லேசாக தலையைத் திருப்பிப் பார்த்தது. சிங்கம் தன் துணையிடம் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தது.

"காட்டிலும் தேர்தல் நடத்த வேண்டும். இங்கேயும் ஓட்டுப் பதிவு நடக்க வேண்டும். உங்களில் ஆதரவு யாருக்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அவரே.... காட்டுக்கு முதலமைச்சராவார்...."

நரி பேசி முடித்ததும் கூட்டத்தில் மௌனம் நிலவியது. சிங்கம் என்ன சொல்லுமோ என்று மான், முயல் போன்ற சாது விலங்குகள் வாயை மூடிக் கொண்டு நின்றன.

கழுதை, கரடி, போன்ற விலங்குகள், "நரி சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. தேர்தலை நடத்துவோம். புரட்சிக்கு வழி வகுப்போம்...." என்றன.

ஊரோடு சேர்ந்து வாழ்வதே நல்லது என்று நினைத்த சிங்கம், "தேர்தலுக்கு நானும் உடன்படுகிறேன். முடிவு எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்..." என்றது.

தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டது. இலை, செடி, கொடிகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பச்சை வண்ணம் நரிக்கு ஒதுக்கப்பட்டது. பனை ஓலை, உண்ணிச் செடியின் காய் இரண்டையும் சேர்த்து இடித்து தயாரிக்கப்பட்ட (வெற்றிலை) சிவப்பு நிறம் சிங்கத்துக்கு ஒதுக்கப்பட்டது.

கருவேல மரத்திலிருந்து கறுப்பு மை தயாரானது. ஒரு பெரிய பாறை மீது சிங்கம், நரியின் படங்கள் வரையப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்துக்கு வாக்களிப்போர் சிவப்புக்கோடும், நரிக்கு வாக்களிப்போர் பச்சைக் கோடும் போட வேண்டும். ஓட்டுப் போடும் எல்லா விலங்குகளுக்கும் ஒவ்வொரு எண் தரப்பட்டிருந்தது.

தேர்தல் அதிகாரியாக முயல் நியமிக்கப்பட்டது. பத்தடி தூரத்திலேயே சிங்கம், நரியின் சார்பில் பூத் ஏஜெண்டுகள் நிறுத்தப்பட்டனர். ஓட்டுப்போட எல்லா விலங்குகளும் வரிசையில் அழைக்கப்பட்டன.

கறுவேல கறுப்பு மை இடது கை, கால் சுட்டு விரலில் வைக்கப்பட்டு ஓலைச் சுவடியில் கை நாட்டு வாங்கப்பட்டது.

ஓட்டுப் பதிவு முடிந்து மூன்று நாட்கள் பாறை பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டது.

மூன்றாவது நாள் பாறை மீதிருந்த கோடுகளை எண்ணப்போன முயலுக்கு ஒரே அதிர்ச்சி. பாறையில் எல்லா கோடுகளும் பச்சையாகவே தெரிந்தன.

ஒருத்தர் கூடவா சிங்கத்துக்கு ஓட்டுப் போட்டிருக்க மாட்டார்கள்? சிங்கத்தின் ஓட்டு என்னாச்சு? இருட்டில் தெரியாமல் எல்லா விலங்குகளும் நரிக்கு போட்டுவிட்டனவா?

முயல் மனம் குழம்பியது.

நரி சந்தோஷத்தில் குதித்தது. "ஆஹா...! நான் ஜெயிச்சுட்டேன்... இனிமே இந்தக் காட்டுக்கு முதலமைச்சர் நான் தான்... நான் தான் தலைவன்...."

நரி தலைகால் புரியாமல் குதிக்க, ஆவாரம் பூவில் தயாரிக்கப்பட்ட மஞ்சள் கீரிடத்தை சிங்கம் நரியின் தலையில் அணிவித்தது.

"காட்டுக்கு முதலமைச்சர் நரி...."

"வாழ்க... வாழ்க..."

"காட்டுத் தலைவன் நரி! தானைத் தலைவன் நரி...." என்றெல்லாம் கோஷங்கள் எழுந்து அடங்கின.

ஓரிரு நாட்கள் சென்றன.

நரி முதலமைச்சராய் சந்தோஷமாக காட்டை வலம் வந்தது.

சிங்கத்தின் குகையைத் தனக்குத் தரும்படி கட்டளை இட்டது.

காட்டைச் சுற்றி வலம் வர கால் வலிப்பதால் யானையைச் சவாரிக்கு அழைத்து, ராஜபவனி வந்தது.

மூன்றாம் நாள் மேகம் கறுத்து மழை கொட்டத் தொடங்கியது.

விலங்குகள் வாக்களித்த பாறை மீதும் நீர்த்துளிகள் உருண்டோட முதலில் பச்சை நிறம் கரைந்தோடியது.

பச்சைக்கோட்டுக்குக் கீழே பனை ஓலை உண்ணிக்காய் கொண்டு தயாரித்த சிவப்பு சாயம் தெரிந்தது. விலங்குகள் பெருவாரியாக சிங்கத்துக்கும், நாலைந்து ஓட்டுக்கள் மட்டுமே நரிக்கும் வாக்களித்திருப்பது தெரிய வந்தது.

சிங்கத்தின் குகையில் அமர்ந்திருந்த நரியை ஒட்டுமொத்த விலங்குகளும் சேர்ந்து போய் முற்றுகையிட்டன.

"என்ன... விஷயம்? என்ன எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வந்திருக்கீங்க....?" இருக்கையை விட்டு எழாமலே கேட்டது.

"ஏன்டா நரிப் பயலே! உன் தாத்ததான் நீல நிற சாயத்தைப் பூசிட்டு வந்து எங்களையெல்லாம் ராஜான்னு சொல்லி ஏமாத்தினார்னா... நீ கள்ளக் கோடு (ஓட்டு) போட்டு எங்களை ஏமாத்தினாயா... உன்னை என்ன செய்கிறேன் பார்..." கரடி நரி மீது பாய்ந்து - பிறாண்டியது.

மற்ற விலங்குகளும் ஆளாளுக்கு நரியை அடிக்க வர.... தலைதெறிக்க ஓடியது நரி.

நீதி : சூழ்ச்சியால் கிடைக்கும் வெற்றி நிலைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நங்கை குமணராசன்

# முதியோருக்கான இல்லம்

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை இயற்கைச் சூழல் மாறுகிறது. கோடை, மழை, குளிர் என்று நாட்டையே அழிக்கும் சுனாமி. அடுக்குமாடிகள், வீடுகளை விழுங்கும் நிலநடுக்கம், சூறாவளிக்காற்றினால் ஏற்படும் தீமைகள் இப்படி இயற்கையின் சீற்றத்தால் வரக்கூடிய துன்பங்கள் ஒருபுறம். மனிதர்களாகிய நாம் செய்யும் தவறு எத்தனையோ புகைவண்டி விபத்து, பேருந்து விபத்து, வானூர்தி விபத்து, இதன் இழப்புகளோ இலட்சக்கணக்கான பிணக்குவியல்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, நாம் வாழுகின்ற இந்தக் குறைந்த நாள்களிலாவது, நாட்டுக்கும், பிற மக்களுக்கும் உதவ மறுத்தாலும், குறைந்தபட்சம் நமது உறவுகள், குடும்பங்கள் அதிலும் முக்கியமாக முதியோர்கள் நம் வீட்டுப் பெரியவர்கள் (மாமா, மாமியார், தாய், தந்தை) இவர்களை அலட்சியப்படுத்தாமல், முக்கியத்துவம் கொடுத்து, அக்கறை காட்டவேண்டும்.

இவர்களுக்கு நம்மால் முடிந்தவரை உதவியோடு, உள் அன்போடு அரவணைத்துப் போனால், உள்ளபடியே நம் உள்ளம் மகிழ்ச்சியாக இருக்கும். செய்யும் உதவிக்கு எதிர் பார்ப்பு என்பது தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேறு, கணவன், மனைவிக்குத் தனியறை. குழந்தைகளுக்குத் தனியறை, அடுக்களை தனியாக உள்ளது. இன்னும் எத்தனையோ அடிப்படை வசதிகள். ஆனால், நம் வீட்டில் நம்மோடு இருக்கும் பெரியவர்கள் அதாவது நம்மை வளர்த்து ஆளாக்க, இன்று அனைத்து வசதிகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம்... அந்த அன்பு உள்ளங்களை அநாதைகளாக, மாற்றி அவர்களைக் கருணை இல்லம், முதியோர் இல்லம் யாரோ நமக்கு அறிமுகம் இல்லாத ஒரு மனிதர் இந்தக் காரியத்தைச் செய்து நான் உங்களை விட உயர்ந்த மனிதன் என்று தன்னை உலகத்தில் அடையாளம் காட்டும் அளவிற்கு நாம் அந்த மனிதரை உயர்த்தி விடுகிறோம்.

நமது கடமையைச் செய்யத் தவறக் கூடாது. இப்படி நாம் வாழ்ந்தால், நம்மைப் பார்த்து மற்றவர்களும் மனம் திருந்தி அவர்களுக்கு எடுத்துக்காட்டான மனிதர்களாய் வாழலாம்.

குடும்ப ஒற்றுமையைப் பொறுத்தமட்டில், அதிகப் பங்கு பெண்களுக்குத்தான், என்ன செய்ய வேண்டும்? போட்டி தேவையில்லை. கொஞ்சம் விட்டுக் கொடுக்கும் பக்குவம், பெருமைக் குணமட், நேசிக்கும் மனம், இந்தக் குணங்கள் நம்மிடம் இருந்தால் பணமோ, வீடு வசதியோ எதுவும் நமக்குத் தடையாகத் தெரியாது. ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் நோக்கிச் சென்றால், இந்த உண்மை புரியும். 100 அடி அல்லது 130 சதுர அடி கொண்ட ஒரு சிறிய வீடு. அதில் எந்த ஓர் அடிப்படை வசதியும் கிடையாது. இருப்பவர்கள் அவர்கள் வசதிக்கு ஏற்றவாறு ஒழுங்குப்படுத்திக் கொள்ளவேண்டும். குறைந்தது ஏழு, எட்டு மனிதர்கள் மட்டுமே தங்கும் அளவிற்கு வடிவமைத்துக் கொண்டு வாழ்வர்.

நினைத்துப் பார்க்க மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருந்த காலம். ஒவ்வோர் உறுப்பினருக்கும் வீட்டில் உள்ளவர்களின் மீது அக்கறை, அன்பு, நெருக்கம், ஆனால், இன்று நிலைமையே

ஏன் நாம் நம் கடமைகளை மறந்துவிடுகிறோம். நாளை வரும் எதிர்காலம் நமக்குக் காத்துக் கொண்டிருக்கிறது என்று நினைத்தால், சிந்தித்தால்.... ஒரு முதியோர் இல்லம் வளர்வதற்கு வாய்ப்பே கிடையாது. பணம் மட்டும் சேர்த்து வைத்தால் போதாது. அதோடு சேர்ந்து நல்ல உள்ளமும் வேண்டும். பணிவு வேண்டும். இரக்கம் காட்டும் குணம் வேண்டும். நம்முடைய குழந்தைகளுக்குக் கண்முன் நடத்தும் இந்த நாடகம் எதிர் காலத்தில் நமக்கும் அரங்கேற்றம் நடந்தால் உங்கள் மனது எவ்வளவு வேதனைப்படும். சற்று நினைத்துப் பாருங்கள். வட நாட்டு மக்கள் என்னதான் வறுமையில் இருந்தாலும், வாழ்ந்தாலும் தன் தாய், தந்தையைத் தன்னோடு வைத்துக் கொண்டு அவர்களுக்குப் செய்யும் பணிவிடையைப் பார்க்கும் போது நமக்கு வியப்பாக இருக்கும். அவ்வளவு மரியாதை.


'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற பழமொழிக்கு ஒப்ப அவர்களை அன்பு செலுத்தி, ஆதரவோடு இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். மகிழ்ச்சி நமக்கும், நம் குடும்பத்திற்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் நிம்மதியும், மன நிறைவும் தரும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. விசயரத்தினம்,
நுணாவிலூர் (இலண்டன்)

# ஒரே பாலாரின் திருமண உறவு பற்றிய சார் பெதிர்வுகள்



சூரிய குடும்பத்திலுள்ள ஒன்பது கோள்களில் ஒன்றான பூமியிற்றான் உயிரினங்கள் தோன்றி வாழ்ந்த வண்ணம் உள்ளன. மற்றைய எட்டுக் கோள்களிலும் உயிரினங்கள் வாழ முடியாது. இப்பூமியானது 457 கோடி ஆண்டுகளுக்குமுன் தோன்றியதென்பர். இனி பூமியில் ஏற்பட்ட மாற்றங்கள், அதில் தோன்றிய ஐயறிவு உயிரினங்கள், மனிதன் தோன்றிய காலவட்டம் ஆகியவற்றை நிரல்படுத்திக் காண்போம்.

- பூமியில் 400 கோடி ஆண்டளவில் உயிரினங்கள் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- 350 கோடி ஆண்டுகளுக்குமுன் தாவர இலைகள் பச்சிலை பெற்று உணவைத் தயாரிக்கும் தாவர ஒளி இயைபாக்கம் பெற்றன.
- 260 கோடி ஆண்டளவில் நீரிலுள்ள உயிரணுச் சவ்வுகள் தரையிலும் தோன்றின.
- 230 கோடி ஆண்டளவில் உயிரகம் செறிந்த வளிமண்டலம் தோன்றியது.
- 100 கோடி ஆண்டுகளுக்குமுன் காளான்கள் தோன்றின.
- தாவரம் 70 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றன.
- 53 கோடி ஆண்டுகளுக்குமுன் கடல் மீன்கள் முள்ளெலும்புடன் தோன்றின.
- 45 கோடி ஆண்டுகளுக்குமுன் ஒட்டுத்தோடுடைய இணைப்புடலி உயிரினங்களின் ஒரு வகைப் பிராணி (Arthropods) நீரிலிருந்து நிலத்தில் வாழத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• 38 கோடி ஆண்டுகளுக்குமுன் நாற்கால் (Tetrapods) பிராணிகள் மீனிலிருந்து தோன்றின. இவை நீரிலிருந்து தலையை வெளியில் நீட்டிச் சுவாசிக்கத் தொடங்கின. அதே காலப்பகுதியில் முதலாவது முதுகெலும்பு பொருந்திய தரை விலங்குகளும் தோன்றின.

• 36 கோடி ஆண்டுகளின்முன் தாவரங்கள் விதைகளைத் தம் விருத்திக்காகத் தந்துதவின.

• 31 கோடி ஆண்டுகளில் பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன தோன்றின.

• 23 கோடி ஆண்டுகளின்முன் ஊர்ந்து செல்லும் மாபெரும் விலங்குகள் (Dinosaurs) தோன்றின.

• 15 கோடி ஆண்டுகளில் பழமையானதும் பறப்பனவற்றிற்கும் ஊர்வனவற்றிற்கும் இடைப்பட்ட ஓர் அதிசயப் பறவை (Archaeopteryx) இனம் தோன்றியது.

• 7 கோடி ஆண்டுக் காலப்பகுதியில் பாலூட்டிகள் பெரிதாக வளர்ந்தன.

• 3 கோடி ஆண்டளவில் சில பாலூட்டிகள் டொல்வின் மீன்களாகக் கடலுக்குத் திரும்பின.


• 20 இலட்சம் ஆண்டளவில் முதல் மனிதன் ஆபிரிக்காவில் தோன்றினான்.

• எட்டு (08) இலட்சம் ஆண்டுகளுக்குமுன் நெருப்பின் பிரயோகமும் அதைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் மனிதன் பெற்றுக்கொண்டான்.

• இரண்டு (02) இலட்சம் ஆண்டளவில் உறுப்பியல் சார்ந்த அமைப்பியலான புது நாகரிகப் பண்பாடுடைய மனிதன் தோன்றினான்.

ஆண் பெண் இணைந்த வாழ்வியல்

உயிரினங்கள் அனைத்தும் பரிணாம வளர்ச்சிக்குட்பட்டு வளர்ச்சியடைகின்றன. அவ்வாறே உயிரினங்கள் ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை வளர்ச்சியடைந்துள்ளன. புல், செடி, கொடி, மரம், பிராணி, நாற்கால் விலங்கு, பறவை ஆகியவற்றினதும், மக்கள், தேவர், அசுரர், இயக்கர் போன்றோரினதும் உயிர் வளர்ச்சியின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுநிலைப்பட்டியலை இற்றைக்கு மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த தொல்காப்பியர் கூற்றுத் தெளிவுபடுத்தி நிற்கின்றது - (தொல். பொருள் 571).

மனிதன் பூமியில் தோன்றுவதற்கு முன்பும், இன்றும் அங்குள்ள உயிரினங்கள் எவ்வண்ணம் தம் இனத்தை விரித்தி செய்தன, செய்கின்றன என்பதைச் சற்றுக் காணபோம். அன்றும், இன்றும் பூமியில் ஓரறிவு உயிரினங்களிலிருந்து ஐயறிவு உயிரினங்கள் வரை வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அவற்றுள் ஆண், பெண் ஆகிய எல்லா உயிரினங்களும் தத்தமது இனத்துடன் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கலவி நின்று தம் இனங்களைப் பெருக்கி வருகின்றன. இக் கல்விதான் அவர்களின் திருமணமாகும். அவைகளின் இணைவு இயற்கை வழியது. பூமியில் உதித்த மனிதனும் இவற்றை அவதானித்தான். அவனிலும் பாலுணர்ச்சி வேகம் பெருகியது. ஆண் பெண்ணழகில் மயங்கினான். பெண்ணும் ஆண் வீரத்தை வேண்டி நின்றாள். ஆணும் பெண்ணும் இணைந்து தம்பதிகளாகினர். தம் இனத்தைப் பெருக்கிவிட்டு இறுதியில் அவர்கள் இறந்து பட்டாலும் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் இனப்பெருக்கத்தை மீண்டும் மீண்டும் பெருக்கிக் கொண்டு வாழ்கின்றனர்.

இனி, தமிழ் இலக்கியங்களான மகாபாரதம், இராமாயணம், தொல்காப்பியம், திருமந்திரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐங்குறுங்காப்பியம், கம்பராமாயணம், பெரிய புராணம், திருவாசகம், நீதிநெறி நூல்கள் போன்றவற்றில், இருபாலாராகிய ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் புரிந்து, தம்பதிகளாகி, இல்லற வாழ்க்கையில் இறங்கி, இன்புற்றிருந்த பாங்கினையும் காண்கின்றோம். மேற்காட்டிய நூல்களில், ஒரு நூலிலாவது ஆண் ஆணையும், பெண் பெண்ணையும் திருமணம் புரிந்த செய்தி ஒன்றும் கூறப்படவில்லை.

மன்னர் ஆட்சிக் காலத்தில், சுயம்வரம் நடத்தி வீற்றிருக்கும் இளவரசர்களில் தனக்குப் பிடித்த ஒருவருக்கு மணமாலை சூட்டி, அவரைத் தன் மணாளனாகத் ஏற்றுக் கொள்ளும் முறை ஒன்றை இளவரசியர்க்கு வழங்கப்பட்டிருந்தது. மன்னன் தனக்கேற்ற இளவரசியைப் பலாத்காரமாகக் கவர்ந்து (இராக்கதம்) திருமணம் புரியும் முறையொன்றும் அன்றிருந்தது. இளவரசியின் பேரழகில் மயங்கிய இளவரசன், அவளைக் கடிமணம் புரிதலும் நிலவியிருந்தது. குறிக்கப்பட்ட போட்டியில் வெற்றிவாகை சூடும் இளவரசனுக்கு மணமாலை சூட்டி அவனைத் தன் மணாளனாக்கிக் கொள்வாள் இளவரசி. இவ்வண்ணம் ஆண், பெண் உறவு அன்றிலிருந்து இற்றைவரை நிலைத்து வருகின்றது.

தொல்காப்பியம் எனும் மூத்த நூலில் தலைவன் தலைவியர், கிழவன் கிழத்தியர், கணவன் மனைவியர் ஆகிய ஆணும், பெண்ணும் இணைந்து கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை ஆகிய ஏழு திணைகளில் சிறு நடை போட்டு, ஒரு தலைக் காமம், அன்புடைக் காமம், பொருந்தாக் காமம் ஆகியவற்றைத் தாண்டீ, களவியல், கற்பியல் ஆகியவற்றில் ஒன்றிணைந்து, பெற்றோரின் இசைவுடன் கரணத்தொடு கூடிய மணவினை நிகழும். அன்றும் பரத்தமை நிலைத்திருந்ததைப் ‘பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே’ என்ற தொல்காப்பியர் சூத்திரத்தால் அறிகின்றோம். இங்கு நால்வர் என்பது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகுப்பினரைக் குறிக்கின்றது. இப் பரத்தையரை நாடி ஆண்கள் மாத்திரம் சென்றார்களேயன்றிப் பெண்கள் செல்லவில்லை என்பதும் தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் நூலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட் பேறு, பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர், தகையணங்குறுத்தல், குறிப்பறிதல் (காமம்), புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல், நாணுத் துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல், பிரிவாற்றாமை, கண் விதுப்பழிதல், பசப்புறு பருவரல், புணர்ச்சி விதும்பல், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய அதிகாரங்களை அமைத்து ஆண், பெண் உறவை மேம்படுத்திக் காட்டுகின்றார் திருவள்ளுவர்.

திருமந்திரம் எனும் நூலை யாத்த திருமூலர், 'புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல' என்றும், 'ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்' என்றும், 'குழவியும் ஆணாம் வலத்தது ஆகில், குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகில்' என்றும், 'கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில் கொண்ட குழவியுங் கோமள மாயிடும்' என்றும், 'கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியும்' என்றும், 'உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்திற் பருவம தாகவே பாரினில் வந்து மருவி வளர்ந்திடும்' என்றும் மந்திரம் அமைத்து, ஆண் பெண் இணைந்த இல்லற வாழ்வின் மேன்மையைச் சிறப்பித்துக் காட்டியுள்ளார்.

திருவாசகம் என்னும் தேன் சிந்தும் நூலில் 'உன் அடியார் தாள் பணிவோம், ஆங்கு அவர்க்கே பாங்கு செய்வோம், அன்னவரே எம் கணவர் ஆவார், அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்' என்றும் 'எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள், எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க, எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க' என்றும், சிவபிரானுடன் பேரம் பேசும் திருவெம்பாவை மகளிர் தம் கணவன்மாரைத் தேர்ந்தெடுக்கும் சீரிய பாங்கினையும, ஆண் பெண்ணுக்கும், பெண் ஆணுக்கும் வேண்டப்படுவதையும் காண்கின்றோம். இத்தேர்வும், இணைவும் இயற்கை வழியில் அமைந்துள்ளது. எனவே இது நிலைத்து நின்று இருவருக்கும் இன்ப ஊற்றாய் அமைகிறது.

ஒரே பாலார் திருமணம்

. ஓர் ஆண் இன்னொரு ஆணுடனும், ஒரு பெண் இன்னொரு பெண்ணுடனும் சேர்ந்து திருமணம் புரிந்து கொண்டு வாழ்வதை ஒரே பாலார் உறவு எனலாம். ஒரே பாலார் திருமணம், 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சட்டம் சார்ந்த அங்கீகாரம் பெறாது சிறிதளவில் நிகழத் தொடங்கியது. இதற்கு, 21ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுப் பகுதியில் ஒருபாலார் திருமணத்துக்கு அங்கீகாரம் கிடைத்தது. 26-06-2015ஆம் திகதிவரை, ஆர்ஜெண்டிறினா, பெல்ஜியம், பிரசீல், கனடா, டென்மார்க், பிரஞ்சு, ஐஸ்லாந்து, லூசெம்பொர்ச் (டுரஒநஅடிழரசபந)இ நுபர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, போர்ச்சுகள், தென்ஆபிரிக்கா, ஸ்பெயின், சுவீடின், பிரித்தானியா, அமெரிக்கா, உறுகுவே ஆகிய பதினெட்டு (18) நாடுகளும் ஒருபாலார் திருமணத்தை அங்கீகரித்தனர்.

இது ஓர் அங்கீகாரமேயன்றி நாட்டுச் சட்டமாக அமையவில்லை. ஒரேபாலார் திருமணத்தை அதாவது ஆண் ஆணையும், பெண் பெண்ணையும்தான் திருமணம் செய்யவேண்டுமென்று உலகிலுள்ள ஓர் அரசாவது சட்டம் இயற்றமாட்டார்கள் என்பதும் யாவருக்கும் தெளிந்த விடயமாகும். ஏனெனில், இவ்வாறான சட்டத்தால் இனப் பெருக்கமின்றி மனித இனம் முற்றாக அழிந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டு விடும் அல்லவா?

ஒருபாலார் திருமணத்தில் மக்கள் நாட்டம் மிகக் குறைந்து கொண்டு செல்வதையே தரவுகள் காட்டுகின்றன. ஒருபாலார் திருமணத்தால் அவர்களுக்கு இனப் பெருக்கம் ஏற்படாது என்பது தெரிந்த விடயமாகும். குழந்தைச் செல்வங்கள் இல்லாது இருப்பதை எவரும் விரும்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்’ என்று கூறுகின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

‘பெண்ணோடு பெண் சேர்வது என்பது அறியாமை ஆகும்’ என்று திருமூலர் ‘பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை’ எனக் கூறித் திருமந்திரம் சமைத்துச் சாடுகின்றார். திருமூலர், முதற்கண் ஆண்களை முன்னிலைப்படுத்தாது, பெண்ணோடு பெண் சேரவேண்டாமென்று கூறிப் பெண் குலத்தாரின் பெருமை பேசும் பாங்கினையும் காண்கின்றோம். மேலும் அவர் பெண்ணானவள் ஆணுடன்தான் சேர வேண்டியவள் என்றும் கூறாமற் கூறிப் போகின்றார்.



ஒருபாலார் திருமணத்தில் கணவன் மனைவி, தலைவன் தலைவி, கிழவன் கிழத்தி, அரசன் அரசி, இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை, இல்லறவியல், தம்பதிகள், மாங்கலியம், புணர்ச்சி, பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், கன்னி கழித்தல், சுயம்வரப் போட்டி, கடிமணம், மக்கட் பேறு, தாய்மை. அலர், பசலை போன்ற சொற்பதங்கள் நிலைத்து நிற்க இடமின்றி வீணே விண்வெளியில் உலா வருவதை யார்தான் சகிப்பார் இவ்வுலகில்?

முடிவுரை

இதுகாறும், ஆண் பெண் இணைந்த வாழ்லியல், ஒரே பாலார் திருமணம் ஆகிய இரு தலைப்பில் அதற்குரிய சீரும் சிறப்பும், குறையும், நிறைவும் அலசப்பட்டுள்ளதைக் கண்டோம். ஒரே பாலார் திருமணம் மிக அண்மைக் காலத்தில் ஒரு சிறு தொகையினரால் மாத்திரம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதினால் மக்களின் இனப் பெருக்கத்தில் மாற்றம் ஏற்படாதென்பதும் தெளிவாகின்றது. மனிதன் தோன்றுவதற்கு முன்னர் தோன்றிய ஓரறிவிலிருந்து ஐயறிவு வரையான உயிரினங்கள் அனைத்தும் இற்றைவரை ஆண், பெண் உறவில் மாத்திரம் நிலைத்து நின்று தம் இனத்தைப் பெருக்கி வருவதையும் காண்கின்றோம். இதுவரை அவைகள் மத்தியில் ஒருபாலார் உறவு தோன்றவில்லையென்பதும் கண்கூடாகும். எனவே விரும்பும் ஒரு சில மக்கள் ஒரே பாலார் திருமணத்தில் இறங்கட்டும். இவர்களும் சின்னாளில் எம் பக்கம் வந்திடுவர் என்பது திண்ணம். ஏனெனில் அவர்கள் தெரிந்தெடுத்த துறையில் செழிப்பு, பொலிவு, நிறைவு குன்றிய பிரதேசமாகும். அதில் எவ்வளவு காலம் அவர்கள் நிலைத்திருப்பர்? எனவே நாம் ஆணும் பெண்ணும் சேர்ந்து இல்லற வாழ்வை அமைத்து இன்புற்று வாழ்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளிதரன்



# சிவனின் பெருமையும், செயலும்

இறைவன் செய்யும் காரியங்களுக்கும், செயல்களுக்கு நாம் விளக்கம் தேடவோ, கண்டுபிடிக்கவோ முடியாது. அதே போல் அவன் சோதிக்க நினைத்து விட்டால் ஈசன் அதில் பேதம் பார்ப்பதில்லை. எம்பெருமானாகிய ஈசனுக்கு, பெரும் பணக்காரனும் சரி, பரம ஏழையும் ஒன்றுதான். ஏன் குருடு, செவிடு, நல்லவர், கெட்டவர் என்று யாரையும் விடுவதில்லை. எத்தனையோ மகான்களுக்கு கூட எவ்வளவோ சோதனைகளை கொடுத்து ஆட்கொண்டவர் எம்பெருமான்.

ஒரு பாம்பு பெட்டியில் அடைபட்டு எத்தனையோ நாள்கள் உணவின்றி பசிவாட்ட, இனி நான் இறந்துவிடுவேன் என்ற நிலைக்கு சென்றுகொண்டிருந்த போது திடீரென ஒரு எலி அந்த பெட்டியில் உணவு கிடைக்காதா என்று எண்ணி துவாரம் இட்டு உள்ளே சென்றது. தன் பசியாற சென்ற எலியை, இறக்கும் நிலையில் இருந்த பாம்பு தானுண்டு பசியாறியதோடு வெளியேயும் சென்றுவிட்டது. இது தான் இறைவன் வகுத்த விதி. இதை யாராலும் வெல்லவோ, விதண்டாவாதம் செய்யவோ முடியாது. அவன் என்ன எண்ணுகின்றானோ அதன் படிதான் யாவும். இதில் நாம் எந்த காரணத்தையும் அறியமுடியாது.

எமது சைவசமயம் வழிகாட்டும் சிறந்த சேவைகளில் பிற உயிர்களுக்கு தேவையான உதவிகளை நம்மாலான தொண்டினை செய்வதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் படைப்பை பார்க்கும் போது மிகவும் விசித்திரமாக இருக்கும். அவன் நல்லவர்களை சோதிக்கும் போது கோபம் ஏற்படுகின்றது. ஆற்றாமையால் கேள்வி பிறக்கின்றது. ஆனால் யாரை கேட்பது. மீண்டும் ஈசனிடமே போவதும் பின் அன்னையிடம் குறைகூறுவதுமாக எம் கவலைகளை குழந்தைகள் போல் மாறி, மாறி முறையிட்டுக் கொள்கின்றோம் அல்லவா!! எம் அறியாமையை பார்த்து அந்த பராசக்திக்கு பொறுக்கமுடியாது. ஆனால் சிவனின் சித்தம் எதுவோ அது நாம் செய்யும் பாவபுண்ணிய அடிப்படையில் தான் இருக்கும்.

மனிதர்கள் முக்குணங்கள் உடையவர்கள். சிலர் தமோகுணம் உடையவர்கள். இவர்கள் மிகவும் சோம்பல் உடையவர்கள். இரண்டாவது ராஜோகுணம், இவர்களுக்கு கோபம் அதிகம் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் குணத்தாலே பகைவர்களை தேடிக்கொள்வார்கள். ஆத்திரம் அழிவைத்தேடிதரும் என கூறுவார்கள். ஆனால் உயர்ந்த குணம் சாத்வீகம். இது இறைவனை அமைதியாக இருந்து நல்லவழிகளில் ஈடுபடச் செய்யும்.

இறைவன் மனிதர்களுக்கு மட்டும் ஏன் ஆறறிவை படைத்தான். மனிதன் சிந்தித்து நல்ல செயல்களை செய்வதற்கே ஆகும். பல ஆன்மீகவாதிகளும், சிறந்த சிந்தனையாளர்களும் எவ்வளவு உதாரணங்களோடு சவசமயத்தின் மகிமையை எடுத்து கூறியுள்ளார்கள். எனினும் நம்மில் பாதிப்பேர் இன்னமும் அறியாமையால் மனத்துன்பங்களில் சிக்கி வழிதெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றோம்.

புலம்பெயர்ந்து நாம் வாழும் நாட்டிலே தற்போது பல ஆலயங்கள் உருவாகியுள்ளது வரவேற்கத்தக்கது. நம் நாட்டில் குழந்தைகளாக இருக்கும்போதே ஆலயத்திற்கு இப்படித்தான் போகவேண்டும், போகும் போது இறைவனுக்கு பூ, பழம் கொண்டு செல்ல வேண்டும், என்று வீட்டிலும் சரி, பள்ளிக்கூடத்திலும் சரி சொல்லி வளர்ப்பதால் நம்மிடம் பயம் அதிகம் இருந்தது. இருக்கின்றது. ஆனால் அந்தளவிற்கு நம்குழந்தைகளுக்கு சமய




அறிவுள்ளதா என்பது தான் என் ஆதங்கம்.

ஆலயங்களிலே திருவிழா காலங்களில் நடைபெறும் பூசைகள் ஏன் செய்யப்படுகின்றன. அதன் பலன்கள், ஆலயத்தை எப்படி வலம்வர வேண்டும், ஏன் விக்கிரகங்களை தொடக்கூடாது, என்ற விளக்கங்களையும், ஆலயத்தை எப்படி சுத்தமாக பேணவேண்டும் என்பதை அடிக்கடி மேற்பார்வையாளர்கள் அறிவிக்க வேண்டும். இறைவனின் வீடு சுத்தமாக இருக்க வேண்டும். மனதுக்கு நிம்மதி தரும் வீடு ஆலயமாகும். நாம் அருகில் நின்று பார்த்தாலும், தூர நின்று பார்த்தாலும் இறைவனின் கருணையும், பலனும் யாவருக்கும் கிடைக்கும். அவனுக்கு பேதம் பார்க்க தெரியாது என்று முதல் வரியிலே எழிதி விட்டேன்.

இணையத்தில் வாசித்த செய்தி "கருவறையில் இருந்து கல்லறை செல்லும் நாம்" இடையில் எத்தனை வேறுபாடுகளையும் துன்பங்களையும் அநுபவிக்கின்றோம் என்று இருந்தது. இறைவன் வகுத்த விதிப்படி தான் வாழ்க்கை அமையும். இறைவனுக்கு மனம் குளிர வழிபாடு செய்து நம்மாலான சேவைகளை ஆற்றி புண்ணிய வழிகளில் ஈடுபடுவோமாக!!


நமசி வாய வாழ்க நாதன் தாழ் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க!!

மனதில் தோன்றும் எண்ணங்களை எழுத்தில் கொண்டு அதனை வரவேற்று பதிவுசெய்யும் தமிழர் தகவல் ஆசிரியருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக்களும் உலோகங்களும்



இரும்பு, செம்பு, துத்தநாகம், வெள்ளி, பொன், கால்ஸியம், ஸோடியம், பொட்டாஸியம், பாஸ்பரஸ், ஸல்பர், அயோடின் முதலிய உலாகப் பொருள்களும் உப்புப் பொருள்களும் நமது உடம்பில் இருக்கின்றன. இவை மிகச் சிறிதளவு இருந்தபோதிலும் உடல்நலத்துக்குத் தேவையாக உள்ளன. இரத்தத்தில் இரும்புச் சத்து உண்டு. அதனுடன் செம்புச் சத்தும் சிறிதளவு உண்டு. மூளையில் துத்தநாகச் சத்து உண்டு. வெள்ளி, பொன் முதலிய உலோகங்களும் மிகச் சிறிய அளவில் இருக்கின்றன.

அயர்ன் டானிக் சாப்பிடும்படி சில சமயங்களில் டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அல்லவா? அயர்ன் டானிக் என்பது அயம் (இரும்பு) சேர்ந்த மருந்து. நமது நாட்டு வைத்தியர்களும், அயச்செந்தூரத்தைச் (இரும்புச் செந்தூரம்) சில நோய்களுக்குக் கொடுக்கிறார்கள். செம்பிலிருந்து தாம்பிரச் செந்தூரமும் தாம்பிர பஸ்மும், வெள்ளி பஸ்பமும், பொன்னிலிருந்து தங்க பஸ்பமும் நமது நாட்டு வைத்தியர்கள் செய்து நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். இதிலிருந்து தெரிவது என்னவென்றால், நமது உடல் நலத்துக்கு உலோகங்களும் சிறிதளவு தேவைப்படுகிறது என்பதே. ஆனால், இந்த உலோக மருந்துகளை, வைத்தியர் சொன்னால் தவிர, நாம் வாங்கிச் சாப்பிடுவது கூடாது. நாம் உண்ணும் உணவிலேயே இந்த உலோகச் சத்துக்கள் கலந்து இருக்கின்றன.

குறிப்பு :கடைகளில் விற்கும் இந்த உலோக மருந்துகளை வாங்கிச் சாப்பிடுவது ஆபத்தானது. இந்த மருந்துகள் சரியானபடி செய்யப்படாவிட்டால், இவை நஞ்சாக மாறி உடம்பையே கெடுத்து அழித்துவிடும். உதாரணமாகத் தாம்பிரபஸ்பம், தாம்பிரச் சுன்னம் என்னும் மருந்துகள் செம்பிலிருந்து செய்யப்படுகிறது. இந்தக்களிம்பு விஷத்தன்மை உள்ளது. களிம்பை நீக்கியபிறகு மேற்படி மருந்துகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது மிகமிகக் கடினம். சுத்தி செய்யாத செம்பிலிருந்து செய்யப்பட்ட மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகளைச் சாப்பிட்டால் உடல் நலம் கெட்டு உடம்பை அழிக்கும்.

அதுபோலவே லங்கபஸ்பம் என்னும் மருந்தும் லங்கபஸ்பம் ஈயத்திலிருந்து செய்யப்படுகிறது. இந்த மருந்து நல்லமுறையில் செய்யப்பட்டால் நலம் பயக்கும். நல்ல முறையில் செய்யப்படாத லங்கபஸ்பம் நஞ்சுத் தன்மையுடையது. இதனால்தான் "வங்கம் தின்றால் பங்கம்" என்னும் பழமொழியும் வழங்குகிறது. வெள்ளி பஸ்பத்தினால் யாதொரு கெடுதியும் இல்லை. வெள்ளி பஸ்பம் நரம்புகளைப் பலப்படுகிறது. அயச்செந்தூரம் இரத்த விருத்திக்கு ஏற்றது. தங்க பஸ்பம் நரம்புகளுக்குப் பலம் கொடுக்கும். அதே சமயத்தில் சிற்றின்ப இச்சையை அதிகமாக உண்டாக்கும். இதனால் தான் "இருக்கிறவன் இரும்பைத் தின்னு. போகிறவன் பொன்னைத் தின்னு" என்னும் பழமொழி ஏற்பட்டிருக்கிறது. இப்பழமொழியில் இரும்பு என்பது அயச்செந்தூரம், பொன் என்பது தங்க பஸ்பம் ஆகும்.

இந்த உலோகங்களைத் தவிர, உடம்பில் வேறு முக்கியமான உலோகப் பொருள்களும் உள்ளன. அவற்றைப் பற்றி ஆராய்வோம்.

கால்சியம்

கால்ஸியம் என்பது சுண்ணாம்பு எலும்புகளும் பற்களும் கால்ஸியம் என்னும் சுண்ணாம்புப் பொருள் நமது உடல் நலத்துக்கு அவசியமானது கால்ஸியம். எலும்புகளையும், பற்களையும் வளர்த்து பலப்படுத்துவதோடு வேறு வேலைகளையும் செய்கிறது. இடைவிடாமல் வேலை செய்து கொண்டிருக்கிற இதயத்தை, நன்றாக வேலை செய்வதற்குக் கால்ஸியம் உதவி செய்கிறது. மேலும் நரம்புகளுக்கும் இரத்தத்திற்கும் கால்ஸியம் தேவைப்படுகிறது. தேவையான அளவு கால்ஸியம் உடம்பில் இல்லையானால் எலும்புகள் உறுதிப்படா. பற்களும் விரைவில் கெட்டுப்போகும்.



வளர்கிற குழந்தைகளின் உடம்பில் கால்ஸியம் இல்லையானால், எலும்புகள் மென்மையடைந்து, வளர்ச்சி குன்றிவிடும். இருதய நோய்களும் உண்டாகும். பிள்ளைப் பேறுபெற்ற தாய்மாருக்கும், கருத்தரித்த பெண்களுக்கும் இந்தக் கால்ஸியம் தேவை. ஆகவே, கால்ஸியம் உள்ள உணவு எல்லோரும் உண்ண வேண்டும்.


கால்ஸியம் என்னும் சுண்ணாம்புச் சத்துள்ள உணவுப் பொருள்கள் : பால், மோர், முட்டையின் மஞ்சட்கரு, முளைக்கீரை, முருங்கைக்கீரை முதலிய கீரைகள், பருப்பு வகைகள் ; வாதுமைப் பருப்பு முதலிய கொட்டை வகைகள் முதலியன. தாம்பூலம் போடுவது நமது நாட்டு வழக்கம். தாம்பூலத்துடன் சுண்ணாம்பு சேர்கிறது. தாம்பூலச் சாற்றை விழுங்குவதன் மூலம் உடம்பில் கால்ஸியம் சேர்கிறது ஆனால், தாம்பூலத்துடன் புகையிலை போடுவது கூடாது. அப்படிச் செய்வது உடம்புக்குத் தீமையளிக்கிறது. ராகி (கேழ்வரகு), சோளம், கோதுமை, தவிடு உள்ள அரிசி, உருளைக்கிழங்கு, முள்ளங்கி, பீட்ரூட் கிழங்கு, காரட் கிழங்கு (மஞ்சள் முள்ளங்கி). இறைச்சி முதலிய பொருள்களிலும் சிறிதளவு கால்ஸியம் உண்டு.

பாஸ்பரஸ்

பாஸ்பரஸ் என்பது ஒருவகை உப்பு. இது, கால்ஸியத்தைப் போலவே எலும்புகளையும் பற்களையும் வளர்க்கிறது. ஆகவே, பாஸ்பரஸ் எலும்புகளும், பற்களும் வளர்வதற்குத் தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எலும்புகளை வளர்ப்பதோடு நரம்புகளும் தசைகளின் ஜவ்வுகளும் நன்னிலையில் இருக்கும்படி வைக்கிறது. உணவின் வழியாக உடம்பில் சேர்க்கிற கார்போஹைட்ரேட் என்னும் மாவுப் பொருளையும் கொழுப்புப் பொருளையும் கரைத்துப் பிரித்து அவை உடம்புக்குப் பயன்படும்படியான நிலையை உண்டாக்குகிறது. இரத்தத்துக்கும் ஓரளவு பாஸ்பரஸ் தேவைப்படுகிறது.

பாஸ்பரசும், கால்ஸியமும் தகுந்த அளவாக உடம்பில் இருந்தால்தான் எலும்புகள் நன்றாக வளரும். தகுந்த அளவாக இல்லாமல் ஏற்றக்குறைவாக இருந்தால் எலும்புகள் நன்கு அமையா. ஆனால், போதுமான டி விட்டமின் என்னும் எலும்பு வளர்க்கும் உயிர்ச்சத்து உடம்பில் இருக்குமானால், எலும்புகள் நன்றாக வளரும். பாஸ்பரஸ் உள்ள உணவுப் பொருள்களாவன :

பால், மோர், முட்டை, பருப்பு வகைகள், வாதுமை முந்திரி முதலிய கொட்டை வகைகள், ராகி (கேழ்வரகு), சோளம், வெள்ளரிக்காய் (இதைத் தோல் சீவாமல் உண்ண வேண்டும்). வசளைக் கீரை, மஞ் சள் முள்ளங்கி (காரட் கிழங்கு) முள்ளங்கி இறைச்சி, மீன் முதலியவை.

இரும்பு

இரும்பு என்னும் அயம் நமது உடம்பின் நலத்துக்குத் தேவையானது என்று மேலே கூறினோம். இரும்புச் சத்துள்ள உணவுப் பொருள்களைச் சாப்பிட்டால் போதுமான அயச்சத்து உடம்பில் சேரும். அப்பொருள்களாவன : முளைக்கீரை, தண்டுக்கீரை, தக்காளி, வெள்ளரிக்காய், வெங்காயம், பருப்புகள், கேழ்வரகு முதலிய தானியங்கள், இறைச்சி, முட்டை, ஈரல், முலாம் பழம், தர்பூசிப் பழம், உருளைக்கிழங்கு, உலர்ந்த பேரீச்சம் பழம் முதலியன.

குளோரின், அயோடின்

இந்த உப்புக்களும் உடல் நலத்துக்குத் தேவை. குளோரின் இரத்தத்தைச் சரியான முறையில் இருக்கச் செய்யவும், ஜீரணக் கருவிகள் உணவை ஜீரணம் செய்வதற்கும் இது வேண்டியதாக இருக்கிறது. நாம் உணவுடன் சேர்த்துக் கொள்கிற சாதாரண உப்பில் குளோரின் இருக்கிறது. அன்றியும் பச்சையான கீரைகளிலும், தக்காளிப்பழம், அனாசிப்பழம், வசளைக்கீரை, வாழைப்பழம், பேரீச்சம்பழம் முதலியவற்றிலும் குளோரின் உண்டு.

கொழுப்புப் பொருள்களையும் கால்ஸியத்தையும் உடம்பில் உபயோகப்படுத்துவதற்கு அயோடின் வேண்டியிருக்கிறது. அயோடின் கீரைகளிலும், பழங்களிலும் இருக்கிறது. மீன் எண்ணெயிலும் இது உண்டு.

மேலே கூறிய உப்புகளும் உலோகங்களும் காய்கறி கீரை கிழங்குகளில் இருப்பதையறிந்தோம். ஆகவே, அவைகளை வேகவைத்தபின், அந்த உப்புகளும் உலோகங்களும், பாத்திரத்தின் அடியில் நீருடன் கலந்து இருக்கும். அந்த நீரைக் கொட்டி விடாமல் உணவுடன் பயன்படுத்த வேண்டும். இதைச் சமையல் செய்வோர் உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவேந்தன்

அந்தப்புரத்து வசானளாவிய இராசகோபுரத்தில் நந்திக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. எல்லாள மன்னனின் பெருமையை எட்டுத் திக்கும் எடுத்துக்காட்டுவது போல! காலைக் கதிரவனின் பொன்னொளிபட்டு, நகர் முழுமையும் கவிந்து கொண்டிருந்த பனிமூட்டம் மெதுவாக மறைந்து கொண்டிருந்தது. படைவீரர்கள் பாயுங் குதிரைகளில் காற்றாகப் பறந்து கொண்டிருந்தனர். புத்தவிகாரைகளிலும், இந்து தேவாலயங்களிலும் வணக்கத்திற்காக மக்கள் மலர்க்கூடைகளை ஏந்தியபடி விரைந்து நடந்து கொண்டிருந்தனர். அநுரதபுரி விழித்துக் கொண்டது. எங்கும் ஒரே ஆரவாரம் மக்கள் கூட்டம்!!

எங்கோ, ஒரு புத்தவிகாரையின் பக்கத்துமடத்தில் படுத்துறங்கிய பிக்கு ஆனந்தர் தூக்கங்கலைந்தெழுந்தார். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு யாசகத்திற்காகப் புறப்பட்டார். அவர் கரங்களில் "பிட்சா பாத்திரம்" இலங்கியது. அவரது இளமையும், அழகும் ததும்பும் உடலினை நீண்ட மஞ்சள் அங்கி அலங்கரித்தது. முகத்திலே அவருக்கே உரித்தான அருட்பொலிவு ஒளிவிட்டு நின்றது. "புத்தம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி" என்று அவர் வாய் முணுமுணுத்தது. அவர் மெல்ல நடந்து கொண்டிருந்தார். அவர் மனதில் கடந்தகாலச் சம்பவங்கள் நிழலாடிக் கொண்டிருந்தன.

எல்லாளமன்னனின் ஆட்சிக்காலத்தில் அநுரதபுரியெனும் அணிநகர் எல்லாச் சிறப்பும் பெற்று விளங்கியது. புத்த துறவிகளும், இந்து மத துறவிகளும் நகரில் நிறைந்திருந்தனர். மதவேற்றுமை, இனவேற்றுமையில்லாத நீதி மன்னனான, எல்லாளனின் ஆட்சியில் எல்லாத் துறவிகளும் நன்கு மதிக்கப்பட்டனர். அவர்கள் எல்லாள மன்னனை வாயார வாழ்த்தினர்! அத்தகைய துறவிகளின் கூட்டத்தில் பிக்கு ஆனந்தர் முதலிடம் வகித்தார். எல்லாள மன்னனின் அரசவையில் பிக்கு ஆனந்தர் சொல் பெருமதிப்புப்பெறும். அந்த அளவுக்குப் பிக்கு ஆனந்தர் ஆண்டிமுதல் அரசர் வரையில் செல்வாக்குப் பெற்றிருந்தார். இத்தனைக்கும்




# காதல் வென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேணல் திலீபனுக்கு 28ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



காரணமாகவிருந்தது அவரது தேசசேவையே! பிக்கு ஆனந்தர் வாழவழியில்லையே என்பதற்காகப் "புத்தனின் புனிதசேவை"க்குப் போகிறேனென்று மஞ்சள் அங்கிக்குள் மறைந்து கொண்டவரல்லர். நாட்டின் நலத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட வீரத் தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர் பிக்கு ஆனந்தர். ஒன்று இரண்டல்ல பத்து ஆண்டுகள் எல்லாள மன்னனின் ஒற்றர் படையில் திறமைமிக்கவராக, சிறந்த வீரராக விளங்கியவர். ஆனால், காலதேவனின் கோரமான தாக்குதல் அவர் குடும்பத்தைச் சிதறடித்துவிட்டது. எல்லாளனின் போர்ப்படையிலேயே வீரர்களாகக் கடமையாற்றிய அவரது தந்தையும், இரு சகோதரர்களும் பயங்கரக் கொள்ளக்கூடத்தைச் சேர்ந்த குண்டர்களால், அவர்கள் சதிக்கூட்டத்தில் சிக்கியதினால் கோரமாகக் கொலையுண்டனர். வயது சென்ற அவரது அன்னை, கணவனையும் தனது மூத்தமைந்தர் இருவரையும் நினைத்து அழுது, அழுதே இறந்து போனாள். பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற வெறிகாண்ட ஆனந்தர் அந்நாள்களில் செய்த அட்டகாசம் சொல்ல முடியாது. பயங்கரக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த எவனாவது அவர் கையில் அகப்பட்டுவிட்டால் உயிரோடு அவன் திரும்ப முடியாது. இப்படி எத்தனையோ தடவை அவர் குண்டர் படையைச் சேர்ந்த பலரைக் கொன்று குவித்திருக்கிறார். ஆனால், ஒரு நாள் அந்திப்பொழுது ஒரு புத்தவிகாரையின் பக்கத்திலேயிருந்து அவர் தம்முடைய வாழ்க்கையின் விசித்திர நிலைமைகளைச் சந்தித்துப் பார்த்தார்.

புத்தனின் அருட்போதனையில் அவர் மனம் ஆறுதல் கண்டது. கொலையையும், வெறியையும் கிளப்பும் ஒற்றர் வாழ்க்கையை அவர் முற்றாக வெறுத்தார். அன்றிலிருந்து மஞ்சள் அங்கி அவர் மாசற்ற உடலினை மறைத்தது. எல்லாளன் தாங்கொணாத்துயருடன் ஒற்றர் படை உறுப்பினரான ஆனந்தர், பிக்கு ஆனந்தராக மாறிச் செல்வதை ஏற்றுக் கொண்டான். பிக்கு ஆனந்தரே, வாழ்க்கை நிலையற்றதுதான், ஆனால் சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆற்றவேண்டிய சேவைகள் பலவுள. புத்தனின் அருட்கடலில் மூழ்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திளைக்கும் நீங்கள் மறுபடியும் ஒரு போர்வீரராக வரநேரிட்டால் என் மனம் எவ்வளவு மகிழ்ச்சியடையும் தெரியுமா? எல்லாளமன்னன் அன்று சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் பிக்கு ஆனந்தரின் காதுகளில் வீரஒலி செய்து கொண்டிருந்தன.

அந்தக் குடிசைக்கு முன்னே வந்ததும், பிக்கு ஆனந்தரின் கால்கள் தாமாகவே நின்று விட்டன.

குடிசையைக் கூர்ந்து நோக்கினார். அவர் முகத்திலேயே இனந்தெரியாத ஒருவிதமான சலனம் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" அவர் வாய் மெதுவாக முணுமுணுத்தது.

குடிசைக்குள்ளிருந்து அழகே உருவான ஓர் இளநங்கை "பிட்சையுடன் ஆனந்தர் முன் தோன்றினாள். "இன்று ஏன் இவ்வளவு நேரம்"? அவள் கேள்வி அவரைத் திகைக்க வைத்துவிட்டதோ, என்னவோ? அவர் வாயே திறக்கவில்லை. அவர் கரங்கள் முன் நீண்டன. அவள் தன் கைகளை நீட்டிப் "பிட்சாபாத்திரத்தை" நிறைத்தாள். சட்டென்று கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். ஒரே மின்தாக்கமோ! பிக்கு ஆனந்தரின் கரங்களுடன் அவள் கரங்கள் உரசிக் கொண்டன. அவள் கண்களின் கூர்மையை ஆனந்தரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. தலையைக் குனிந்து கொண்டார். அதுவரை சிலைபோல நின்ற அவள், நினைவுவரவே பிக்கு ஆனந்தரைப் பணிந்து கொண்டாள். அவர் மெதுவாக நடந்து கொண்டிருந்தார். அவர் மனத்திரையில் அந்த அழகி அழியாத சித்திரமாக உருவெடுத்துக் கொண்டிருந்தாள். அவள் அந்த வாலிபப் பிக்கு நடந்து மறையும் வரையில் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றாள்.

இரவின் ஆட்சி சமீபித்துக் கொண்டிருந்தது! ஆனாலும் மக்கள் அதைப்பற்றி அவ்வளவு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அன்று பூரணைத்தினம், கதிரவன் மறைந்தாலும் இரவைப் பகலாக்கும் பால்நிலவின் உதயத்தை எண்ணி மக்கள் தங்கள் கடமைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர். பிக்கு ஆனந்தர் அந்த விகாரையின் பக்கத்திலுள்ள நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் மனதில் ஒரே போராட்டம் எல்லாம் அந்த அழகியைப் பற்றித்தான். அவளுடைய ஒரு பார்வையே அவருடைய துறவு நிலையைத் தொலைத்துவிடும் போலிருந்தது. "அந்தக் குடிசைப் பக்கம் போகாமலிருக்கலாமென்றாலோ, சரியென்றிருக்கும் மனம், வெளியே புறப்பட்டதும், "போ போ" என்று உந்தித் தள்ளுகிறதே! என்ன சோதனை பகவானே...." அவர் மனதில் பாசமும், பத்தியும் ஒன்றையொன்று மல்லாடிக் கொண்டிருந்தன. குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

"சுவாமி...." சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினார் அவர் கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. அந்தக் குடிசைவாசியான எழிலரசிதான் அங்கே நின்றாள். "சே, இங்கே கூட ஆசைப்பேய் அரசாட்சி செலுத்த ஆரம்பித்துவிட்டதா?" அவர் துறவு மனம் உள்ளுக்குள் இப்படி ஓலமிட்டது.

"எங்கே இந்த நேரத்தில்....?"

"மாலைப் பிரார்த்தனைக்காக விகாரைக்கு வந்தேன் இங்கே தங்கள் தரிசனம் கிடைக்கிறது". அவள் இப்படிச் சொல்லிவிட்டு மெதுவாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பிக்கு ஆனந்தரின் "துறவுக்கட்டிடமே" இடிந்துவிடும் போலிருந்தது.

"ஏன் சிரிக்கிறாய் ....? என்னிடத்தில் என்ன அலுவல்....?" அவர் முகம் கடுமையாகிக் கொண்டிருந்தது.

"மன்னிக்க வேண்டும் சுவாமி. எதைக் கேட்பதென்றே எனக்குத் தெரியவில்லை. உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அதுதான் வந்தேன்".

அவள் எழில்வதனத்தில் இப்போது பயமும், நிராசையும் நிழலிட்டன. பிக்கு ஆனந்தரின் முகம் அமைதி பெற்றது. குரலும் தாழ்ந்தது.

"பெண்ணே நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுந்துறந்தவனானாலும் வாலிபன். நீயோ எழில் மங்கை. அதுவும் கன்னிப்பெண். நமது உள்ளத்தூய்மையை உலகம் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடும். ஏன் வீணாக நமது நிலையைக் கலக்கிக் கொள்ள வேண்டும்."

பிக்கு ஆனந்தர் இப்படிக்கூறிவிட்டு, அவளைக் கூர்ந்து நோக்கினார். அவள் முகத்தில் பலவித உணர்ச்சிகள் கொந்தளித்து, விகாரப்பட்டு நின்றன. அவள் உடல் நடுங்கியது. கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலப் பேசினாள்.

"சுவாமி, நான் உங்களைக் காதலிக்கிறேன்". அப்பால் அவளால் பேசமுடியவில்லை. மாமன்னர் முன் நின்றுகொண்டிருக்கும் குற்றவாளியைப் போலப் பயந்துகொண்டு நின்றாள்.

அதே பழைய தாக்குதல்.....! பிக்கு ஆனந்தர் நிலைதடுமாறினார். அவள் பார்வை பேச்சு இப்பொழுதைய நிலை ஒவ்வொன்றாக அவர் மனத்திரையின்றோன்றி அவரை, அவர் திடசித்தத்தைக் கரைக்க ஆரம்பித்தன. உடனடியாக ஒன்றும் பேசமுடியாதவராக நின்று கொண்டிருந்தார். ஒவ்வொருவினாடியும் ஒவ்வொரு யுகமாகப் பட்டது அவளுக்கு. ஆனந்தருக்கோ ஒன்றுங் கூறமுடியாதநிலை. சிந்தித்து முடிவு செய்வதற்கு வேண்டியநேரமில்லை. அதற்குள் யாரோ வரும் சத்தம் கேட்டது.

"நீ போ, நாளை சந்திப்போம்"!

"எங்கே?"

"இங்கேதான், இதே நேரத்தில்".

இப்பொழுத அவள் வேகமாக நடந்து கொண்டிருந்தாள் வீடுநோக்கி. மனதில் ஒருவித அமைதி. என்றாலும் அது தற்காலிகமானது தானே! நாளைக்கு அவர் என்ன சொல்லப் போகிறாரோ, என்பதில் அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது.

விகாரையை அடுத்துள்ள மடத்தில் அகல் விளக்கு சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வெளியே வெண்ணிலவு பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது காயும் நிலவைக் கூடக் கவனியாது அகல்விளக்கின் ஒளியில் எதையோ யோசித்துக் கொண்டிருந்தது ஒரு உருவம். அந்த உருவம் பிக்கு ஆனந்தரைத் தவிர வேறுயாருமல்ல! நேரம் போய்க்கொண்டிருப்பதே அவருக்குத் தெரியவில்லை. நகரவாசற்காவற்காரன் எழுப்பிய மணி ஒலியைக் கேட்டபின்னர்தான் நேரம் நள்ளிரவு பன்னிரெண்டுமணியென்பதை அவர் உணர்ந்தார். பேசாமல் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டார்.

விடிந்து இவ்வளவு நேரமாகிவிட்டதே என்று ஆச்சரியப்பட்டார். அவர் விழித்துக் கொண்டபோது, அவசரம் அவசரமாக எல்லாளன் அரசவை நோக்கிப் புறப்பட்டார். "புத்தனின் அருட்கடலில் மூழ்கித் திளைக்கும் நீங்கள் மறுபடியும் ஒரு போர் வீரராக வரநேரிட்டால் என் மனம் எவ்வளவு மகிழ்ச்சியடையும், தெரியுமா" எல்லாளன் அன்று சொல்லிய வார்த்தைகள் இப்பொழுது அவர் மனதில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தன.

மாலை மலர்ந்தது. பிக்கு ஆனந்தர் இப்போது புதிய தோற்றத்தில் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவள் வேகமாக வந்து கொண்டிருந்தாள். சமீபத்தில் வந்துவிட்டாள். அவள் நடை தளர்ந்தது. ஆச்சரியத்தில் அவள் கண்கள் அகலவிரிந்தன. மஞ்சள் அங்கி போர்த்திருக்கும் பிக்கு ஆனந்தர் அங்கேயில்லை. இளமையும், வலிமையும் ஒளிவிடும் உருவமாகப் போர்வீரனுக்கு உரிய உடைதரித்த ஆனந்தனை அங்கே கண்டாள். ஏதோ பேச எண்ணி வாயெடுத்தாள். ஆனால் பேசமுடியவில்லை. இருகரங்கள் அவளை இறுக அணைத்தன. அந்த அணைப்பில் அவள் - அவர்.....! "சே, அதற்குள் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்" அவள் இப்படிச் சொல்லிவிட்டுச் சிரித்தாள். "இல்லை காதல் வென்றது". அவள் கன்னங்களில் இரு உதடுகள் அன்பு முத்திரையைப் பதித்துக் கொண்டே இந்த வார்த்தைகளை உதிர்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவை மு.தயாளன்

# தோற்றது தாய்மை

அந்த மண்டபம் கலகலப்பாக இருந்தது.

லண்டனில் பெரும்பாலான திருமணங்கள் இங்கு தான் நடைபெறும்.

அளவான அழகான மண்டபம்.

விலை அதிகமல்ல ஆனால் குறைவுமல்ல. நடுத்தரம். இந்த மண்டபத்தில்தான் சபேசனுக்கும் சாரதாவுக்கும் இன்று திருமணம் நடைபெறப் போகிறது.

சபேசனுக்கு இருபத்தெட்டு வயது. அளவான உயரம். கம்பீரமான தோற்றம். மேவி இழுத்த தலைமயிர். சாதாரணமாய் அழகான வாலிபன்.

சாரதா சபேசனுக்கேற்ற உயரம். கொஞ்சம் நல்ல நிறம். வட்ட முகம். சதை தொங்காத தேகம். முல்லைச் சிரிப்பு. சாந்தமான கண்கள்.

காதல் கல்யாணம். வேலை புரிவது ஒரு இடத்தில். ஒத்துப்போனதால் காதல் கனிந்தது.

இதனைப் பெற்றாரும் புரிந்து கொண்டதால் இன்று திருமணம் நடைபெறப்போகிறது.

மண்டபம் மெல்ல மெல்ல நிரம்பிக் கொண்டிருந்தது.

இன்னும் மாப்பிள்ளை வரவில்லை. பெண் முதலே வந்து அறையில் காத்திருக்கிறாள்.

மண்டபத்தின் கிழக்கால் அமைந்துள்ள சிறு மேடையில் நாதஸ்வர வித்துவான்கள் தங்கள் திறமைகளைக் காட்டிக் கொண்டிருந்தனர். பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் அவரவர் அலுவல்களில் மூழ்கி இருந்தனர்.

மாப்பிள்ளையின் கார் வந்து விட்டது.

மாப்பிள்ளை பக்கத்தைச் சேர்ந்த ஒருவர் நாதஸ்வரக்காரர்களிடம் வந்து மாப்பிள்ளை வந்த செய்தியைக் கூறுகிறார்.

மாப்பிள்ளையினுடைய கார் மண்டப வாசலில் வந்து நின்றது.

மாப்பிள்ளை அழைப்புக்காக நாதஸ்வரம் முழங்கிக் கொண்டிருந்தது.

மாப்பிள்ளை பட்டு வேட்டி சால்வையுடன் தோழன் சகிதம் காரை விட்டு இறங்குகிறார்.

மாப்பிள்ளை இந்த உடுப்பில் மிக அழகாக இருந்தார். நெற்றியில் சந்தனப் பொட்டும் பளபளவென்ற பட்டு வேட்டியும் சபேசனை எடுப்பாகக் காட்டின.

மேளதாளங்களோடு ஆர்ப்பாட்டமாக மணமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

கிரியைகள் ஆரம்பமாகின. சபையிலிருந்தவர்கள் காலங்காலமாக இந்தக் கிரியைகளைப் பார்திருந்தாலும் இன்று ஏதோ புதிதாகப் பார்ப்பது போல் கழுத்தை நீட்டிப் பார்த்தார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது மணப் பெண் வரும் நேரம். ஒழுங்கமைப்பில் சினிமாகூடத் தோற்றுப்போகும்.

அழகான இனிமையான பாட்டு. பாட்டுக்கேற்ற வண்ணம் மெல்ல மெல்ல அடியெடுத்து தோழிகள் புடை சூழ மணமகள் வந்து கொண்டிருந்தாள்.

மணமகள் மேடைக்கு வந்து மணமகனுக்கு இடப்பக்கமாக அமர்கிறாள்.

குருக்கள் தன் வேலையை ஆரம்பிக்கிறார். "மாங்கல்யம் தந்துனானே.." சொன்னபடி தாலியை எடுத்து மணமகன் கையில் கொடுக்கிறார். சபேசன் மூன்று முடிச்சுப் போட்டு தன் கடமையை முடித்து விடுகிறான். திருமண நிகழ்வு முடிந்து விடுகிறது. இப்படி ஆடம்பரமாக நடந்த திருமண நிகழ்வின் மூலமாக சபேசனும் சாரதாவும் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர்.

நல்ல வாழக்கை.

இருவரும் வேலை செய்தார்கள். நல்ல வருமானம். நண்பகர்களோடு கொண்டாட்டம். பல நாடுகளுக்குச் சுற்றுலாச் சென்றார்கள். இன்பமான வாழ்க்கை. துன்பமே இல்லை.

காலம் நகர்ந்து கொண்டிருந்தது. மூன்று வருடங்கள் முப்பது வினாடியாக கடந்துவிட்டது. இனிமேல் வாரிசு பற்றி சிந்திக்கவேண்டும் என்று சபேசன் நினைத்தான். சாரதாவுக்கு நாட்டமில்லை.

சாரதாவைப் பொறுத்தவரை பிள்ளைகள் தன் சுதந்திர வாழ்வைக் கெடுத்துவிடும் என்ற பயம் இருந்தது. இது சம்பந்தமாக பலதடவை இருவரும் வாக்குவாதப்பட்டுக் கொள்வதுண்டு.

ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருவரும் தத்தளித்தார்கள். சபேசனின் பொறுமையோ எல்லையைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஒரு நாள் இருவருக்கும் இடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

முடிவில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர். சாரதா ஒரு நிபந்தனை விதித்தாள். தனனை வேலையிலிருந்து நிறுத்தக் கூடாது என்பதுதான். சபேசன் ஒத்துக் கொண்டான்.

இதன் விளைவு மூன்று மாதத்தில் அவள் வயிற்றில் கரு வளரத் தொடங்கியிருந்தது. சபேசன் அவளைப் பூப்போலப் பார்த்தான். பழம்பால் விற்றமின்கள் எல்லாம் அவர்கள் வீட்டில் தாராளமாக நுழைந்தன.

சாராதாவைப் பிள்ளையைப் போல் அன்பாகப் பார்த்தான். அவனின் கவனிப்பால் அவள் பெருமை கொண்டாள். அவனைக் கணவனாகத் தந்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறினாள்.

குழந்தை பூமியைப் பார்க்கும் நாளும் வந்தது. சபேசன் உற்சாகத்தில் பறந்து கொண்டிருந்தான். அவள் பிரசவ வலியால் துடித்தபோது அவனும் துடித்தான். அவன் வேண்டாத கடவுளில்லை. பிள்ளை பிறந்தது. சுகப்பிரசவம். தாயும் சேயும் நலம். கோயிலுக்கு ஓடிப்போய் அர்ச்சனை செய்தான் சபேசன்.

வைத்திய சாலையில் இருந்து மூன்றாம் நாளே வீட்டிற்கு வந்து விட்டார்கள். பெண் குழந்தை. பூரணி என்று பெயரிட்டார்கள். பிள்ளை தாய்ப்பாலை மறக்குமட்டும் அவள் வேலைக்குப் போகவில்லை. சினத்தோடு வீட்டிலிருந்தாள். நித்தம் விவாதம் நடக்கும். மன அழுத்தத்துக்கு உள்ளானாள்.

பல நோய்கள் இவ்வழுத்தத்தால் அவளுக்கு வரத் தொடங்கின. எந்த வைத்தியராலும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை. ஈற்றில் கவுன்சிலிங் போகும்படி ஒரு வைத்தியர் கூறினார். அதையும் செய்தார்கள். முடிவு அவள் வேலைக்குப் போனால் எல்லாம் சரி என்றானது. பிள்ளையைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல இடத்தைத் தேடினார்கள். பிள்ளையைக் காலையில் கொண்டுபோய் பிள்ளை பார்ப்பவர்களிடம் விட்டுவிடுவார்கள். மாலையில் திரும்பவும் பிள்ளையை வீட்டுக்குக் கொண்டுபோய் இருவரும் கொஞ்சி விளையாடுவார்கள்.

மீண்டும் இன்பமான வாழ்க்கை ஆரம்பமாகி இருந்தது. இந்த இன்பமான காலம் நீளமாக இருக்கவில்லை. இந்த இன்பமான வாழ்க்கை காலத்தில் அவர்களை அறியாமலே இரண்டாவது குழந்தை அவள் வயிற்றில் வளர ஆரம்பித்தது. சாரதா திடுக்கிட்டாள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக அவள் தவித்தாள். சபேசன் தனக்குள் சந்தோசம் அடைந்தான். இந்தப் பிள்ளையை அழிக்கவேண்டுமென்று கங்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டினாள். சபேசன் அதற்கெதிராகப் போர் கொடி தூக்கினான்.

மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. வேதாளம் பழையபடி மரத்தில் ஏறிவிட்டது. இவர்கள் இப்படிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போதே குழந்தை வளர ஆரம்பித்திருந்தது. சபேசனின் பக்கம் வலுப் பெறத் தொடங்கியது. சபேசனே வென்றான். மீண்டும் வேலைக்குப் போவேன் என்று நிபந்தனை வைத்தாள்.

பிறகு பார்ப்போம் என்று அமைதியாக இருந்தான். இரண்டாவது குழந்தையும் அமைதியாகப் பூமியைத் தரிசித்தது. பிரச்சினை மீண்டும் ஆரம்பமானது. பிறந்த குழந்தையை சாரதா அறவே வெறுத்தாள். வேலைக்குப் போவேன் என்று அடம் பிடித்தாள். சபேசன் முடியாது என்று பிடிவாதமாக நின்றான். அவள் வேலைக்குப் போவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது அவன் வாதம். இரண்டு பிள்ளைகளையும் பிள்ளை பார்க்கும் இடத்தில் விடுவதால் அவளின் முழுச் சம்பளமும் போய்விடும் என்ன பிரயோசனம் என்பது அவன் வாதம். பிள்ளைகளையும் ஒழுங்காக வளர்க்காமல் பணமும் இல்லாமல் இருப்பதில் அவன் உடன்பட மறுத்தான்.

ஒரு பெண் வேலைக்குப் போவது பணத்துக்காக மட்டுமே என்பது அவன் விளக்கம். அதற்கப்பால் அவளின் வாழ்க்கை ஒரு சந்தோச உலகத்துக்குச் செல்கின்றதென்ற நடைமுறை உண்மையை அவன் சிந்திக்க மறந்திருந்தான். நித்தமும் இதையிட்டுச் சண்டை. பக்கத்து வீட்டுக்காரர்கள் எட்டிப்பார்ப்பார்கள். அவ்வளவுதான்.

அவளுக்கு மன அழுத்தம் அதிகமானது. அவன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவள் வெறுக்க ஆரம்பித்திருந்தாள். அவன் எதை விரும்புகிறானோ அதை அழித்துச் சந்தோசமடைய ஆரம்பித்தாள்.

அவளின் இந்த நடவடிக்கைகளை சபேசன் கவனிக்கவில்லை. அவள் அமைதியாக இருப்பதாகவே அவன் நினைத்தான்.

மன அழுத்தததால் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தாள். அவளின் செய்கைகளுக்கு அர்த்தங்களே இருக்கவில்லை. சபேசன்மேல் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் விரும்பும் எல்லாவற்றையும் நாசஞ் செய்ய ஆரம்பித்தாள். அவள் கதைப்பதை முழுமையாக நிறுத்தினாள்.

அவன் ஒவ்வொரு நாளும் வேலையால் வந்து பிள்ளைகளோடு கொஞ்சிக் கொண்டிருப்பதை முறாயத்துப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவன் பிள்ளைகள் மேல் கொள்ளைப் பிரியமாக இருப்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. பிள்ளைகள் அவளுக்கு உயிருள்ள உணர்வுள்ள ஜீவன்களாகத் தெரிவதில்லை. பதிலாக அவர்கள் அவளுக்கு அவன் மிக விரும்பும் பொருள்களாகவே தெரிந்தனர்.

அன்று அவன் வேலைக்குச் சென்றதும் பிள்ளைகளைக் கூப்பிட்டாள். அழகான அந்தப் பிள்ளைகள் ஓடி வந்து அவளைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சின. அது அவளுக்குச் சந்தோசமான உணர்வாக இல்லை.

கண் மூடி முழிக்கமுன் பக்கத்தில் இருந்த கயிற்றை எடுத்து பூரணியின் கழுத்தைச் சுற்றி இறுக்கினாள். பூரணி வீல் என்று கத்தினாள். அவள் அந்த அழுகையை சபேசனைத் தண்டிப்பதாக எண்ணி சந்தோமடைந்தாள். இறுக்க இறுக்க பிள்ளையின் நாக்கு வெளியே வந்தது. பிள்ளையின் தலை தொங்கியது. தள்ளி விட்டுவிட்டு மற்றப் பிள்ளையை இழுத்து அதே மாதிரிச் செய்தாள். பிள்ளைகள் இரண்டினதும் சத்தங்கள் மெல்ல மெல்ல அடங்கின.

அவள் திருப்தி அடைந்து சாதாரண நிலைக்கு வந்தபோதுதான் பிள்ளைகள் நிலத்தில் கிடந்த பரிதாப நிலை அவளுக்குப் புரிந்தது. கத்தினாள். ஓவென்று கத்தினாள். தொண்டை கிழியக் கத்தினாள். தாய்மை விழித்துக் கொண்டது. என்ன செய்வதென்று அவளுக்கும் புரியவில்லை.

கயிற்றை எடுத்து தன் கழுத்தையும் இறுக்கினாள். உயிர் மெல்ல மெல்லப் பிரிந்து கொண்டிருந்தது.

அந்த மூன்று உயிர்களும் வீட்டை விட்டு மெதுவாக வெளியேறிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் நன்றே!

நவராத்திரி வந்துவிட்டால் ஒரே கொண்டாட்டந்தான். ஒன்பது நாள்களும் வழிபாடு, பிரசாதம் என்று களிப்பாகக் கழியும். சைவப் பாடசாலை மாணவர்களுக்கு மகிழ்வு கொடுக்கும் காலம் அது. அதில் நிறைவு நாளாகிய பத்தாம் நாளை விஜயதசமி என்பர். புதிதாகக் கல்வி கற்கத் தொடங்கும் சிறுவர்களுக்கு 'ஏடு தொடக்கல்' என்ற சடங்கு நடைபெறும். சிரித்துக் கொண்டு வரும் சிறுவர்களும் அழுது அடம்பிடிக்கும் சிறுவர்களுமாக ஊரே குதூகலிக்கும். எல்லாம், நாலெழுத்துப் படித்து நல்ல தொழிலில் அமர்ந்து விட்டால் மகனோ, மகளோ இருக்க வைத்து உணவு போடுவார்கள் என்ற பெற்றோரின் ஆவலால் வருவது கல்வி என்பது அதுவன்று.

கல்வியைக் கற்பதற்கு நமக்கிருக்கும் நாள்கள் போதா. நம்முடைய ஆயுட்காலம் முழுவதும் இருந்து படித்தாலும் பாதி நூல்களையேனும் படிக்க முடியுமா என்பது சந்தேகந்தான். காரணம், இலக்கியங்கள் பல தமிழிலே உள்ளன. இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் போன்ற பெருங்காப்பியங்கள் தமிழிலே இருக்கின்றன. திருமுறைகள், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் போன்ற சமயநூல்கள் பல இருக்கின்றன. பின்னாளில் வந்த பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் நூல்கள் பலவுள. தமிழ் மொழியில் நிறைய நீதி நூல்களும் இருக்கின்றன. மற்றெந்த மொழியிலும் இல்லாத அளவுக்குத் தமிழிலே அவை உள்ளன. நீதி வெண்பா, அறநெறிச்சாரம், மூதுரை, நல்வழி, ஆத்திசூடி என்பன அவற்றுட் சில. இந்த நூல்கள் கல்வியைப் பல இடங்களிலே சிறப்பித்துச் சொல்கின்றன. கல்வி கற்க வேண்டிய அவசியத்தைச் சொல்கின்றன. கல்வியின் பெருமையைச் சொல்கின்றன. கல்வி ஏழு பிறப்புக்கும் நம்மைத் தொடர்ந்து வரும் என்கின்றன. ஏன்? இதுபற்றி நாம் சிறிது சிந்திக்க வேண்டும்.

மனிதர்களை ஔவை இருவகையாகப் பிரித்தார். இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் என்பது அவரின் பிரிப்பு. ஆனால், இன்னொரு வகையான பிரிவு உள்ளதை இங்கே நாம் பார்க்கலாம். கற்றோர் உயர்ந்தோர், கல்லாதோர் தாழ்ந்தோர் என்பது அந்தப் பிரிவு. இதற்கு உதாரணமாக ஒரு பாடலைப் பார்க்கலாம்.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'

என்று தொடங்கும் ஒரு பாடலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற மன்னன் பாடியுள்ளான். தன் ஆசிரியருக்கு ஓர் இடர் வந்த போது அதை நீக்க உதவியும், மிகுதியாகப் பொருளைக் கொடுத்தும் அவரை வழிபாடு செய்தலை வெறுக்காது கற்றல் நல்லது என்பது மேலுள்ள வரிகளின் பொருள். அப்படிக் கற்பதால் என்ன நன்மை? இது நமக்குள்ளே பிறக்கும் கேள்வி. அதற்கான பதில்கள் இதே பாடலின் பின்னடிகளில் வருகின்றன. பெற்ற தாய்கூடக் கல்வியில் மேம்பட்ட தன் பிள்ளையை மற்றைய பிள்ளைகள் விட ஒருபடி மேலேயே வைத்திருப்பாள். ஒரே குடும்பத்துள்ளும் மூத்தவனைவிட இளையவன் கற்றிருந்தால் அந்தக் கற்றவன் வழியையே அரசும் தொடரும். இவை எல்லாவற்றையும் விட, கடைசி வரிகள் தான் மிக முக்கியமானவை.

'வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே'
- புறம் 183

என்ற இவ்வரிகள், தாழ்ந்த குடிப்பிறந்தாலும் ஒருவன் கல்வியறிவு பெற்றுவிட்டால் அவன் முன்னிலையில் மற்றெல்லோரும் பணிய வேண்டியவரே என்பதை வலியுறுத்துகின்றன. வேறுபாடு தெரிந்த நான்கு வருணத்திலும் கீழ்க்குலத்து ஒருவன் கல்வி கற்றால் மேற்குலத்தில் உள்ளவனும் அவனைத் தாழ்ந்தவன் என்று பாராது, அவனுடைய கல்வியின் மீதுள்ள மதிப்பால் அவனை வழிபடுவான் என்பது பொருள்.

இதே கருத்தைத் திருவள்ளு வரும் திருக்குறளிலே குறிப்பிடுகின்றார். ஒருவர் உயர்குடியிற் பிறந்திருந்தாலும் கற்றிலர் ஆயின், தாழ்ந்த குடிப்பிறந்த கற்ற ஒருவரின் பெருமைக்கும் சிறப்புக்கும் முன்னர் அவர் ஒரு சிறியவராகவே கருதப்படுவார்.

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார்
கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு



குறள் 419

எனவே கல்வியின் சிறப்பு இவையிரண்டு பாடல்களாலும் பெறப்படுகின்றது. இந்த இரண்டு பாடல்களுக்கும் மேலும் மெருகூட்டுவதுபோலக் கீழே வரும் பாடல் அமைகின்றது.

உப்பு விளைவது சவர் நிலத்திலேதான். நெல்லோ நல்ல செழித்த வயல்களில் மட்டுமே விளையும். ஆனால், களர் நிலத்தில் விளைந்த அந்த உப்பைச் சான்றோர்கள் நன்கு செழித்த வயல்களில் உற்பத்தியான நெல்லைவிட உயர்ந்ததாக மதிப்பர். களர் நிலத்தில் விளைந்த உப்பு மதிக்கப்படுவதுபோல கீழ்;ப்பட்ட குலத்திலே பிறந்தாலும் கற்றோர்கள் மேலிடத்திலே வைக்கப்படுவார்கள். அவர்கள் மதிக்கப்படுவார்கள். பின்வரும் பாடல் அது.

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோர் ஆயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்
நாலடியார்

கல்வியினும் மேலான செல்வம் வேறு எதுவும் இல்லை. நாம் அதைக் கற்போம். மற்றவர்களும் கற்ற உதவுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் அமைக்கப்படும் லைக்கா கிராமம்

லைக்காவின் ஞானம் அறக்கட்டளையினால் அமைக்கப்படவுள்ள லைக்கா கிராமத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் மற்றும் நினைவு தூபி திரை நீக்கம் என்பன ஒகஸ்ட் 26 ஆம்திகதி புதன்கிழமை நடைபெற்றது. இந்த வைபவமானது வவுனியா வடக்கு சின்ன அடம்பன் ராசபுரம் பகுதியில் அமைக்கப்படவுள்ள லைக்கா குடியிருப்பானது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸ்ஸநாயக்க, லைக்கா நிறுவன தலைவர் சுபாஸ்கரன் அல்லிராஜா, ஞானம் அறக்கட்டளையின் இணைத் தலைவர் ஞானம்பிகை அல்லிராஜா, லைக்கா நிறுவனத்தின் பிரதித் தலைவர் பிரேம் சிவசாமி ஆகியோரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர, லைக்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயசீலன், லைக்காவின் உலகளாவிய செயற்பாட்டிற்கான திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பாலசிங்கம் ராஜ்சங்கர் ஆகியோர் உட்பட வீட்டுப்பயனாளிகள், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

150 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான இந்த வீட்டுத்திட்டமானது லைக்கா கிராமம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது வவுனியா நகரத்திலிருந்து சுமார் 53 கிலோ மீற்றர் தூரத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் சின்ன அடம்பன் ராசபுரம் எனும் பகுதியில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிலப்பரப்பில் இந்தக் கிராமம் அமைக்கப்படுகின்றது.

ஒரு குடும்பத்திற்கு எட்டுப் பரப்பு என்ற வகையில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் லைக்கா கிராமம் அமையவுள்ளது. சுமார் 175 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் லைக்கா கிராமத்தில் 150 வீடுகள் மலசல கூட வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன.

அத்துடன் சுகாதார மேம்பாட்டு நிலையம், விளையாட்டு மைதானம், சிறுவர் மேம்பாட்டு நிலையம், சமூக மேம்பாட்டு நிலையம், பொதுக்கிணறுகள், என்பனவும் அமைக்கப்படவுள்ளன. ஒன்பது மாத காலத்தில் வீடுகளை கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த லைக்கா கிராமத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் லைக்கா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 100 ஏக்கர் நிலப்பகுதியில் விவசாய பண்ணைகள், கால்நடை வளர்ப்புக்கள், தொழிற்சாலைகள் என்பனவும் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம் இளைஞர், யுவதிககளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளும் எடுப்பதற்கு ஞானம் அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது.

கடந்த 25 வருடங்களாக யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்து தற்காலிகமாக பூந்தோட்ட அகதி முகாம்களில் பெரும்சிரமங்களின் மத்தியில் வாழ்ந்துவந்தமக்களின் நிரந்தர வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும் லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் இந்த மக்கள் சேவையை அனைவரும் பாராட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999

ஆடை ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக நீங்கள் என்றும்
நாடவேண்டிய ஒரே இடம்
Jk Gold House &
Fashion House
314 - 316 London Road
Croydon, Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677



எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு



Breakfast Lunch Dinner

Anthoorium
Jewellery & Textiles
World of Designs
102, B Burlington Road
New Malden,]
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS

FOR FURTHER DETAILS
08712 244 007







JOIN US ON YouTube www.youtube.com/ayngaraneurope www.facebook.com/ayngaran visit us: www.ayngaran.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

ANJAPPAR
Chettinad Indian Restaurant

ANJAPPAR CATERING



Menu

HIGH CLASS INDIAN VEGETARIAN AND
NON VEGETARIAN TAKE AWAY

JUST EAT

020 7438 20 23 - 0742 1763 518

www.anjappartakeaway.co.uk

admin@anjappartakeaway.co.uk

229, HIGH STREET NORTH, EAST HAM, E6 1JG | LONDON

Follow Us on

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

# கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்





லூசியத்தில்
AMIRTAA
பொன்னி புழுங்கல் அரிசி
ஏக விநியோகத்தர்கள்

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Best Food

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323


259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677




எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்




லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org